# தினபூமி

thinaboomi.com


பூமி: 25 சுற்று: 346 வைகாசி 09

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், வெள்ளி, மே 23, 2025

சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00

**அமெரிக்காவில் இஸ்ரேல் தூதரக ஊழியர்கள் இருவர் பயங்கரவாதியால் சுட்டுக்கொலை**

...2-ம் பக்கம்

**ராஜஸ்தான், பிகானீரில் கர்ணி மாதா கோவிலில் பிரதமர் மோடி வழிபாடு**

...3-ம் பக்கம்

**எதிரணியை 40 முறை ஆல் அவுட்: ஐ.பி.எல். வரலாற்றில் யாரும் தொட முடியாத இடத்தில் மும்பை அணி**

...6-ம் பக்கம்





முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில், சென்னை வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட ‘உலகெங்கும் கலைஞர்’ எனும் நூலினை வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பாராளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், சென்னை வளர்ச்சிக் கழகத்தலைவரும், சட்டக்கதிர் ஆசிரியரும், நூல் தொகுப்பாசிரியருமான வி.ஆர்.எஸ்.சம்பத், விடுதலை மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### டாஸ்மாக் விவகாரம்: தமிழ்நாடு அரசின் அப்பீல் வழக்கில்

# அமலாக்கத்துறை விசாரணைக்கு சுப்ரீம் கோர்ட் இடைக்கால தடை

## கூட்டாட்சி அமைப்பை சிதைத்துள்ளதாக கடும் கண்டனம்

புதுடெல்லி, மே 23-

**டாஸ்மாக் வழக்கில் அமலாக்கத்துறை வரம்பு மீறி நடக்கிறது என்றும் விதிகளை மீறி செயல்பட்டு வருகிறது என்றும் அனைத்து எல்லையையும் தாண்டி செயல்பட்டு கூட்டாட்சி அமைப்பை சிதைத்துள்ளது என்றும் அமலாக்கத்துறைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள சுப்ரீம் கோர்ட், டாஸ்மாக் வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவு பிறப்பித்துள்ளது.**

**திடீர் சோதனை...**

டாஸ்மாக் நிறுவனத்தில் நடைபெற்ற ரூ.1000 கோடி ஊழல் வழக்கு தொடர்பாக கடந்த மார்ச் மாதம் சென்னை, விழுப்புரம் உள்பட 10-க்கும் மேற்பட்ட இடங்களில் அமலாக்கத்துறை திடீர் சோதனை நடத்தியது. சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் டாஸ்மாக் பொது மேலாளர் (மொத்த விற்பனை மற்றும் நிர்வாகம்) சங்கீதா மற்றும் துணை பொது மேளாளர் (விற்பனை மற்றும் கொள்முதல்) ஜோதி சங்கர் ஆகியோரை அழைத்து விசாரணை நடத்தினர். இதையடுத்து, டாஸ்மாக் மாவட்ட மேலாளர்கள் பலருக்கு சம்மன் அனுப்பப்பட்டு, அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

**ஐகோர்ட்டில் வழக்கு...**

இந்நிலையில், கடந்த 16-ம் தேதி டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் விசாகன் வீடு, திரைப்பட தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன் வீடு, தொழிலதிபர் ரத்தீஷ் வீடு உள்பட சென்னையில் 12 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். அமலாக்கத்துறை சோதனையை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், அமலாக்கத்துறை விசாரணைக்கு ஒத்துழைப்பை வழங்க உத்தரவிட்டது.

**மேல்முறையீட்டு மனு**

சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக தமிழ்நாடு அரசு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தது. சென்னை உயர் நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து டாஸ்மாக் வழக்கின் விசாரணைக்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டது. இந்த வழக்கு சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் அமர்வு

(கடைசி பக்கம் பார்க்க)

**“தனி நபர்கள் செய்த விதி மீறலுக்காக ஒட்டுமொத்தமாக ஒரு நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுப்பதா ? முறைகேடு நடந்தது என்றால் சம்பந்தப்பட்ட தனிநபர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தலாம். ஆனால் ஒட்டுமொத்த அரசு நிறுவனத்தையும் எப்படி விசாரிக்க முயற்சிப்பீர்கள்? அமலாக்கத்துறை அனைத்து எல்லையையும் தாண்டி செயல்பட்டு கூட்டாட்சி அமைப்பை சிதைத்துள்ளது.”**

**- சுப்ரீம் கோர்ட்**



### நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று டெல்லி பயணம்

சென்னை, மே 23-

**பிரதமர் மோடி தலைமையில் நாளை டெல்லியில் நடைபெறும் நிதி ஆயோக் நிர்வாகக் குழு கூட்டத்தில் பங்கேற்க முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று டெல்லி செல்கிறார்.**

மத்திய அரசின் நிதி ஆயோக் அமைப்பின் தலைவராக பிரதமர் உள்ளார். பிரதமர் தலைமையில் ஆண்டுதோறும் நிதி ஆயோக் நிர்வாகக் குழு கூட்டம் நடத்தப்படும். இக்கூட்டத்தில், இந்தியாவில் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முதல்வர்கள், துணை நிலை ஆளுநர்கள் உள்ளிட்டோர் பங்கேற்பார்கள். அந்த வகையில், நிதி ஆயோக்கின் இந்தாண்டுக்கான கூட்டம் மே 24-ம் தேதி நடைபெறுகிறது. இதற்கான அழைப்பு அனைத்து மாநில முதல்வர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த வகையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், நிதி ஆயோக் கூட்டத்தில் இந்தாண்டு பங்கேற்கிறார். இதற்காக அவர் மே 23- ம் தேதி மாலை டெல்லி புறப்பட்டுச் செல்கிறார். அங்கு 24-ம் தேதி கூட்டத்தை முடித்துவிட்டு, அன்று மாலையே சென்னை திரும்புவார் என கூறப்படுகிறது. கூட்டத்தில், தமிழகத்துக்கு பல்வேறு திட்டங்களின்கீழ் நிலுவையில் உள்ள நிதிகளை விடுவிக்க பிரதமரிடம் வலியுறுத்துவார் என கூறப்படுகிறது.

# தமிழகத்திற்கான கல்வி நிதியை மத்திய அரசு ஒதுக்காதது ஏன்..?

## சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி

சென்னை, மே 23-

**தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை மத்திய அரசு ஒதுக்காதது ஏன்?" என்று ஐகோர்ட்டு கேள்வி எழுப்பியுள்ளது.**

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளில் ஏழை மாணவர்களுக்கு 25 சதவீத இடஒதுக்கிட்டிற்கான மாணவர் சேர்க்கை நடப்பு கல்வி ஆண்டில் இதுவரை தொடங்கவில்லை என்று கூறி கோவையை சேர்ந்த மறுமலர்ச்சி இயக்கம் என்ற அமைப்பின் நிர்வாகி ஈஸ்வரன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், நீதிபதி லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்கறிஞர் ரவீந்திரன், "கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் 25 சதவீத இடஒதுக்கீட்டிற்கான மாணவர்களின் கல்வி கட்டணத்தில் 60 சதவீதத்தை மத்திய அரசும், 40 சதவீதத்தை மாநில அரசும் வழங்குகிறது. ஆனால் மத்திய அரசு 2021-ம் ஆண்டு முதல் 2023-ம் ஆண்டு வரை எந்தவித நிதியும் ஒதுக்கவில்லை. இந்த ஆண்டுகளில் 100 சதவீத நிதியையும் மாநில அரசே ஒதுக்கியுள்ளது என்று தெரிவித்தார்.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதி, "தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை மத்திய அரசு ஒதுக்காதது ஏன்?" என்று கேள்வி எழுப்பினார். இதற்கு மத்திய அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "அனைத்து மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சில காரணங்களால் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கப்படவில்லை" என்று தெரிவித்தார். அப்போது, "என்ன காரணத்திற்காக நிதி ஒதுக்கப்படவில்லை?" என கேள்வி எழுப்பிய நீதிபதிகள், தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய நிதி எவ்வளவு என்பது குறித்த விவரங்களை நாளை (இன்று) சமர்ப்பிக்க வேண்டும் என மத்திய அரசு தரப்புக்கு உத்தரவிட்டு, வழக்கின் விசாரணையை இன்றைக்கு ஒத்திவைத்தனர்.

### முப்படைகளின் சக்கரவியூகத்தால் மண்டியிட்டது:

# பாகிஸ்தானுடன் இனி எந்த வகையிலும் பேச்சு இல்லை

## பிரதமர் நரேந்திரமோடி திட்டவட்டம்

பிகானீர், மே 23-

**நாட்டின் முப்படைகளும் ஒரு சக்கரவியூகத்தை உருவாக்கியதால் பாகிஸ்தான் மண்டியிட்டது, இனி அந்த நாட்டுடன் எந்த பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை என பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.**

ராஜஸ்தானின் பிகானீர் நகரில் நடைபெற்ற விழாவில், ரூ.26,000 கோடி மதிப்பிலான மேம்பாட்டுத் திட்டங்களை தொடங்கி வைத்து பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார். அப்போது அவர், “ரூ. 26,000 மதிப்புள்ள மேம்பாட்டுத் திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டன. உள்கட்டமைப்பு பணிகளுக்கு முன்பை விட ஆறு மடங்கு அதிக பணம் செலவிடப்படுகிறது. இன்று, இந்தியா தனது ரயில்வே வலையமைப்பை நவீனமயமாக்கி வருகிறது. வந்தே பாரத், அமிர்த பாரத் மற்றும் நமோ பாரத் ரயில்கள் நாட்டின் புதிய வேகத்தையும் முன்னேற்றத்தையும் குறிக்கின்றன.

ஏப்ரல் 22 அன்று, பஹல்காமில் பயங்கரவாதிகள் நமது சகோதரிகளின் நெற்றியில் இருந்து குங்குமத்தை அழித்தனர். பஹல்காமில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டின் வலியை 140 கோடி இந்தியர்களும் உணர்ந்தனர். பயங்கரவாதிகள் கற்பனை செய்ய முடியாத தண்டனையை வழங்குவதற்கான தீர்மானத்தை நாங்கள் நிறைவேற்றினோம். பயங்கரவாதத்தின் மையத்தில் நாங்கள் தாக்குதல் நடத்தினோம். நமது அரசாங்கம் மூன்று படைகளுக்கும் சுதந்திரம் அளித்தது. மூன்று படைகளும் ஒரு சக்கரவியூகத்தை உருவாக்கியதால் பாகிஸ்தான் மண்டியிட்டது. இனி அந்த நாட்டுடன் எந்த பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை.



நமது சகோதரிகளின் குங்குமத்தை அழிக்க புறப்பட்டவர்கள், மண்ணில் புதையுண்டு அழிந்துபோனார்கள். ஏப்ரல் 22 ஆம் தேதி நடந்த தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக, பயங்கரவாதிகளின் 9 பெரிய மறைவிடங்களை 22 நிமிடங்களில் அழித்தோம். இந்தியாவின் பதில் அதன் எதிரிகளுக்கு ஒரு வலுவான செய்தியை அனுப்பியது. குங்குமம் துப்பாக்கிப் பொடியாக மாறும்போது என்ன நடக்கும் என்பதை உலகமும், நாட்டின் எதிரிகளும் பார்த்துவிட்டார்கள்.

மோடியின் ரத்த நாளங்களில் ஓடுவது ரத்தம் அல்ல. கொதிக்கும் சிந்தூர் (குங்குமம்) தான் பாய்கிறது. மோடி இங்கே இருப்பதை பாகிஸ்தான் மறந்துவிட்டது. நான் நெஞ்சை நிமிர்த்தி, தலையை நிமித்து நின்று கொண்டிருப்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். அவர்களுடன் இனி எந்த வகையிலும் பேச்சு என்பதே கிடையாது. அப்படி பேசினால், அது அவர்கள் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் பற்றியதாக பற்றி மட்டுமே இருக்கும்.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# தமிழ்நாட்டில் முன்கூட்டியே தொடங்குகிறது பருவமழை

சென்னை, மே 23-

**தமிழ்நாட்டில் தென் மேற்கு பருவமழை 27-ந் தேதி தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் முன்கூட்டியே அடுத்த 5 நாட்களில் அதாவது 25-ம் தேதிக்குள் தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இதன்படி கேரளாவில் தென்மேற்கு பருவமழை அடுத்த 4 அல்லது 5 நாட்களில் தொடங்க வாய்ப்புள்ளது. இது தமிழகத்தின் சில பகுதிகளில் பரவும். இதேபோல, மத்திய மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திரா, வடதமிழக பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன்காரணமாக வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகக்கூடும். இது இன்று காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறும். பின்னர் இது வடக்கு திசையில் நகர்ந்து மேலும் வலுவடையக் கூடும். இதனால், தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்த சூழலில், மத்திய கிழக்கு அரபிக்கடலில் நிலவி வரும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த 12 மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்த நிலையில், தெற்கு கொங்கன் - கோவா கடலோரப் பகுதிக்கு அப்பால் உள்ள மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவானது.

இது இன்று மாலை காற்றழுத்த தாழ்வுப் பகுதி வடக்கு திசையில் நகர்ந்து, காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுவடையும் என வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. இதன்படி கேரளா - தமிழ்நாடு பகுதிகளில் முன்கூட்டியே தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கு சாதகமான சூழல் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மேற்கு தொடர்சி மலையையொட்டிய பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் வங்கக்கடலில் வரும் 27ம் தேதி குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. இது அடுத்த 2 நாட்களில் மேலும் வலுவடையக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காவிரியில் தமிழ்நாட்டிற்கு 40 டி.எம்.சி. நீர் திறக்க வேண்டும்

## கர்நாடகாவிற்கு மேலாண்மை ஆணையம் உத்தரவு

புதுடில்லி, மே 23-

**தமிழகத்திற்கு காவிரியில் 40 டி.எம்.சி., தண்ணீரை திறந்துவிட கர்நாடகாவிற்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டு உள்ளது.**

டெல்லியில் காவிரி மேலாண்மை ஆணையத்தின் 40-வது கூட்டம் நடந்தது. மேலாண்மை ஆணைய தலைவர் ஹால்தர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழக அதிகாரிகள், கர்நாடகா மாநில அரசின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் தமிழகத்திற்கு உரிய காவிரி நீரை திறந்து விட வேண்டும் என தமிழக அரசு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழகத்திற்கு 40 டி.எம்.சி., தண்ணீரை திறந்து விட வேண்டும் என மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டு உள்ளது. அந்த உத்தரவில், ஜூன் மாதத்திற்கான பங்கு 9.19 டி.எம்.சி., ஜூலை 31.24 டி.எம்.சி. தண்ணீரை சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி திறந்து விட வேண்டும் என உத்தரவில் கூறப்பட்டு உள்ளது.

## மார்க்கெட் விலை நிலவரம்

| BSE | NSE |
|---|---|
| -644.64 | -203.75 |
| பாயின்ட் 80,951.99 | பாயின்ட் 24,609.70 |

**தங்கம்** 1 சவரன் ₹71,800 · 1 கிராம் ₹8,975

**வெள்ளி** 1 கிலோ ₹112,000 · 1 கிராம் ₹112.00

**டாலர்** ₹86.00


**பெட்ரோல்** ₹102.63 · **டீசல்** ₹94.24

# அமெரிக்காவில் இஸ்ரேல் தூதரக ஊழியர்கள் இருவர் சுட்டுக்கொலை

**வாஷிங்டன், மே 23-**

அமெரிக்காவில் இரண்டு இஸ்ரேல் தூதரக ஊழியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் நிச்சயதார்த்தம் செய்யவிருந்த ஒரு இளம் ஜோடி என்று தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் அமைந்துள்ள இஸ்ரேல் நாட்டு தூதரகத்தில், பயங்கரவாதி நடத்திய துப்பாக்கிச் சூட்டில், இஸ்ரேல் தூதரகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். 'பாதிக்கப்பட்டவர்களுக்கு அடுத்த வாரம் ஜெருசலேமில் நிச்சயதார்த்தம் நடக்க இருந்தது' என அமெரிக்காவிற்கான இஸ்ரேல் தூதர் யெச்சியல் லெய்டர் தெரிவித்தார்.



இதுகுறித்து அமெரிக்காவில் உள்ள இஸ்ரேல் தூதரகம் கூறியிருப்பதாவது: யாரோன் மற்றும் சாரா இரண்டு பேருக்கும் விரைவில் நிச்சயதார்த்தம் நடக்க இருந்தது. வாஷிங்டனில் ஒரு பயங்கரவாதி அவர்களை சுட்டுக் கொன்றான். அவர்களின் கொலையால் முழு தூதரக ஊழியர்களும் மனம் உடைந்துள்ளனர். இந்த இழப்பிற்கு எங்களது வருத்தத்தை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது. எங்கள் இதயங்கள் அவர்களின் குடும்பத்தினருடன் உள்ளன. இந்த துயரமான நேரத்தில் தூதரகம் அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர் சிகாகோவைச் சேர்ந்த 30 வயதான எலியாஸ் ரோட்ரிக்ஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் மீது எந்த குற்ற வழக்குகளும் இல்லை என்பது விசாரணையில் தெரியவந்தது.

# ரூ.72 ஆயிரத்தை நெருங்கியது ஒரு சவரன் தங்கத்தின் விலை

**சென்னை, மே 23-**

சென்னையில் நேற்று (மே 22) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.360 உயர்ந்து ஒரு சவரன் ரூ.71,800க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.45 உயர்ந்து ஒரு கிராம் ரூ.8,975க்கு விற்பனையானது.

சர்வதேச நிலவரங்களால், நம் நாட்டில் இம்மாத துவக்கத்தில் இருந்து, தங்கம் விலையில் அதிக ஏற்ற, இறக்கம் காணப்படுகிறது. தமிழகத்தில் கடந்த 3 நாட்களுக்கு முன் (மே 20), ஆபரண தங்கம் கிராம், 8,710 ரூபாய்க்கும், சவரன், 69,680 ரூபாய்க்கும் விற்பனையானது.

நேற்று முன்தினம் (மே 21), ஒரே நாளில் தங்கம் விலை கிராமுக்கு, 220 ரூபாய் உயர்ந்து, 8,930 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சவரனுக்கு, 1,760 ரூபாய் அதிகரித்து, 71,440 ரூபாய்க்கு விற்பனையானது. இந்நிலையில், நேற்று (மே 22) 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.360 உயர்ந்து ஒரு சவரன் ரூ.71,800க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.45 உயர்ந்து ஒரு கிராம் ரூ.8,975க்கு விற்பனையானது. ஒரு சவரன் தங்கம் விலை மீண்டும் ரூ.72 ஆயிரத்தை நெருங்கி நகைப்பிரியர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது.

# இன்று முதல் ஏற்காட்டில் கோடை விழா தொடக்கம்

**சேலம், மே 23-**

ஏற்காட்டில் கோடை விழா இன்று முதல் தொடங்குகிறது.

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் 48-வது கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி இன்று (வெள்ளிக்கிழமை) தொடங்கி 29-ந் தேதி வரை 7 நாட்கள் நடைபெறுகிறது. தினமும் பல்வேறு துறைகள் சார்பில் கலைநிகழ்ச்சிகள், போட்டிகள் நடத்தப்பட உள்ளன. இன்று காலை 7 மணிக்கு ஏற்காடு மலைப்பாதையில் ஆண்கள், பெண்களுக்கான மலையேற்றம் நடக்கிறது. தொடர்ந்து ஏற்காடு கலையரங்கத்தில் புலியாட்டம், சிலம்பாட்டம், நாட்டுப்புற மற்றும் மேற்கத்திய நடன நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளன.

நாளை (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு ரெட்டிரீட் விளையாட்டு மைதானத்தில் ஆண்களுக்கான கால்பந்து போட்டியும், ஏற்காடு கலையரங்கத்தில் குழந்தைகளுக்கான இளம் தளிர் நடைப்போட்டி, அடுப்பில்லா சமையல், நடைவண்டி, உப்பு மூட்டை தூக்குதல், தவழும் போட்டிகளும் நடக்கின்றன. இதையடுத்து கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.

கோடை விழா மற்றும் மலர் கண்காட்சியையொட்டி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சேலம் மண்டலம் மூலம் பொதுமக்களின் வசதிக்காக ஏற்காட்டுக்கு இயக்கப்படும் 12 பஸ்களுடன் கூடுதலாக 32 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

# பயங்கரவாதம்: பாக். மீது இந்தியா குற்றச்சாட்டு

**நியூயார்க், மே 23-**

பாகிஸ்தானை கடுமையாக சாடிய இந்திய தூதர் அனுபமா சிங், 'பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது,' என்று குற்றம் சாட்டி உள்ளார்.

ஜெனீவாவில் உள்ள உலக சுகாதார அமைப்பின் தலைமையகத்தில் நடந்த நிகழ்ச்சியில் இந்திய தூதர் அனுபமா சிங் பேசியதாவது: பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது. பயங்கரவாதத்தின் ஆதரவாளர்கள் பாகிஸ்தான் மண்ணிலிருந்து செயல்படுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, இந்தியா 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற திட்டத்தைத் தொடங்கியது. இதன்படி பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகள் முகாம்கள் தாக்கப்பட்டன. பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தாமல் நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். பாகிஸ்தானால் பயிற்சி பெற்ற பயங்கரவாதிகள் மற்றும் அவர்களின் முகாம்கள் மீது தாக்குதல் நடத்தினோம். சிந்து நதி நீர் ஒப்பந்தம் தொடர்பாக தவறான தகவலை பாகிஸ்தான் பரப்புகிறது. இவ்வாறு அவர் பேசினார். இந்திய தூதர் அனுபமா சிங் பேசிய வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

# டெல்லியில் ஐ.எஸ்.ஐ. முகவர்கள் 2 பேர் கைது

**புதுடெல்லி, மே 23-**

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.-யின் இரண்டு முகவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஐ.எஸ்.ஐ. ஸ்லீப்பர் செல்களின் வலையமைப்பை டெல்லி காவல்துறை ரகசிய நடவடிக்கையின் மூலம் முறியடித்தனர்.

2025 ஜனவரி முதல் மார்ச் வரை மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் மத்திய நிறுவனங்களும் ஈடுபட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நேபாள வம்சாவளியைச் சேர்ந்த ஐ.எஸ்.ஐ. முகவர் அன்சாருல் மியான் அன்சாரி உட்பட இரண்டு முகவர்களை டெல்லி காவல்துறையினர் கைது செய்தனர். அவர் வசம் இருந்த ஆயுதப்படைகள் தொடர்பான பல ரகசிய ஆவணங்களையும் அவர்கள் மீட்டனர்.

இது தொடர்பான குற்றப்பத்திரிகை சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்டது, அதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ. முகவர்கள் இருவரும் இப்போது திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

## ஈஸ்டர் தொடர் குண்டுவெடிப்பு:
# பாதிக்கப்பட்ட 661 பேருக்கு ரூ.8.8 கோடி இழப்பீடு வழங்கியது இலங்கை அரசு

**கொழும்பு, மே 23-**

தொடர் குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட 661 பேருக்கு 8.8 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டதாக அந்நாட்டு உச்சநீதிமன்றத்தில் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை அன்று தொடர் குண்டு வெடிப்பு சம்பவம் நடைபெற்றது. தற்கொலைப் படைகள் மூலம் தேவாலயங்கள், முக்கிய நட்சத்திர ஓட்டல்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 270 பேர் உயிரிழந்தனர். 500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

உளவுத்துறை எச்சரித்தும், தாக்குதலை அரசு தடுக்க தவறிவிட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை முடிவில் அப்போதை அதிபர் சிறிசேனா புலனாய்வுத்துறை இயக்குனர் நிலந்தா ஜெயவர்தனே உள்ளிட்ட உயர் அதிகாரிகள் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு, காயம் அடைந்தவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி 661 பேருக்கு 8.8 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டதாக அட்டார்னி ஜெனரலுக்கான துறை உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

குண்டுவெடிப்புகள் குறித்து விசாரணை நடத்த சிறிசேனா ஒரு குழுவை நியமித்தார். இந்த குழு தாக்குதல் குறித்த முன்கூட்டியே உளவுத்துறை அறிக்கைகளை புறக்கணித்ததாக சிறிசேனா மீது குற்றம்சாட்டியது குறிப்பிடத்தக்கது.

## சரக்கு ரயில் தடம் புரண்டு விபத்து

**சென்னை, மே 23-**

அரக்கோணத்தில் சென்று கொண்டு இருந்தபோது திடீரென சரக்கு ரயில் தடம் புரண்டதால் சென்னை- பெங்களூரு வழித்தடத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சென்னை / பெங்களூருக்கு ஹூப்ளி ரயில் சென்று கொண்டு இருந்தது அப்போது அந்த ரயில் ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் சென்று கொண்டு இருந்தபோது திடீரென சரக்கு ரயில் தடம் புரண்டது. உடனே ரயில் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சரக்கு ரயில் தடம் புரண்டதை அடுத்து, சென்னை- பெங்களூரு வழித்தடத்தில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதுகுறித்து தகவல் அறிந்து, தடம் புரண்ட 3 பெட்டிகளை சரி செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டனர். இதனால், சென்னை- பெங்களூரு செல்லும் ஹூப்ளி ரயில் நடு வழியில் நிறுத்தப்பட்டுள்ளது.

## கேன்ஸ் திரைப்படவிழா:
# குங்குமம் வைத்து வந்த ஐஸ்வர்யா ராய்

**கேன்ஸ் (பிரான்ஸ்), மே 23-**

நடிகை ஐஸ்வர்யா ராய் கேன்ஸ் திரைப்பட விழாவில் புடவையுடன் குங்குமம் வைத்து வந்தது பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது.

2025-ம் ஆண்டுக்கான கேன்ஸ் திரைப்பட விழா பிரான்ஸின் கேன்ஸ் நகரில் கடந்த மே 13 ஆம் தேதி துவங்கியது. 11 நாள்கள் நடைபெற்று மே 24 ஆம் தேதியன்று நிறைவடையவுள்ளது. உலகின் சிறந்த திரைப்பட விழாக்களில் முதன்மையானதாகக் கருதப்படும் கேன்ஸ் விழாவில் பங்கேற்க உலகம் முழுவதுமிருந்து சினிமா நட்சத்திரங்கள், ரசிகர்கள் கலந்துகொள்வது வழக்கம்.



அப்படி, இந்தியாவிலிருந்து பல பிரபலங்கள் விழாவில் கலந்து கொண்டாலும் ஒவ்வொரு ஆண்டும் நடிகை ஐஸ்வர்யா ராய் தவறாமல் கலந்துகொள்கிறார். மேலும், இந்தியப் பண்பாடு மற்றும் பிரதிநிதிப்படுத்தும் விஷயங்களுக்காகவும் ஐஸ்வர்யா ஒவ்வொரு ஆண்டும் கலந்து கொள்கிறார். ஆண்டுதோறும் விதவிதமான ஆடைகளில் தோற்றமளிக்கும் ஐஸ்வர்யா ராய், இந்த முறை பனாரஸ் புடவையில் நெற்றியில் குங்கும (சிந்தூர்) திலகமிட்டபடி சிவப்பு கம்பளத்தில் நடந்து வந்தது அனைவரது கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.

ஐஸ்வர்யா ராய் இந்தத் தோற்றத்தில் வந்ததற்குக் காரணம், காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் சுற்றுலா பயணிகள் பலியானதைத் தொடர்ந்து இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' எனப் பெயரிட்ட தாக்குதல் ஒன்றை பாகிஸ்தானில் நடத்தியது. அதைக் குறிப்பிடும் வகையிலேயே, ஐஸ்வர்யா இந்தத் தோற்றத்தில் வந்திருப்பார் என்றே ஊகிக்கப்படுகிறது.

# பயங்கரவாதத்திற்கு அமெரிக்காவில் இடமில்லை: அதிபர் டிரம்ப் ஆவேசம்

**வாஷிங்டன், மே 23-**

அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில் அமைந்துள்ள இஸ்ரேல் தூதரகத்தில், யூத அருங்காட்சியகத்திற்கு அருகே நடந்த தாக்குதலில் இஸ்ரேல் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் 2 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பாலஸ்தீன ஆதரவு நபர் இந்த தாக்குதலை நடத்தியதாக கூறப்படும் நிலையில், அமெரிக்க அதிபர் டிரம்ப் இந்த சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;-

யூத எதிர்ப்பு பயங்கரவாதம் உடனடியாக முடிவுக்கு வர வேண்டும். வெறுப்புக்கும், பயங்கரவாதத்திற்கும் அமெரிக்காவில் இடமில்லை. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்ற சம்பவங்கள் நடைபெறுவது மிகவும் வேதனை அளிக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பாக்.கை இன்னும் அதிகமாக இந்தியா தாக்கியிருக்க வேண்டும்
## சுப்பிரமணியன் சுவாமி கருத்து

**பாட்னா, மே 23-**

பாகிஸ்தானை இன்னும் பயங்கிரமாக தாக்கிருக்கலாம் என்று முன்னாள் மத்திய மந்திரி சுப்பிரமணியன் சுவாமி கூறியுள்ளார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது பாகிஸ்தான் இன்னும் அதிகமாகத் தாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் சுப்பிரமணியன் சுவாமி வலியுறுத்தி உள்ளார். பாட்னாவில் உள்ள ஜெய்பிரகாஷ் நாராயண் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பஹல்காமில் படுகொலையை ஏற்பாடு செய்ததன் மூலம் பாகிஸ்தான் மோதலைத் தொடங்கியது. பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் "நமது நாகரிகத்தின் வரலாற்றில்" மிகவும் கொடூரமான சம்பவங்களில் ஒன்றாகும் என்று கூறினார்.

இதனைத்தொடர்ந்து ஆபரேஷன் சிந்தூர் மற்றும் அதன் பின்விளைவுகள் குறித்த கேள்விகளுக்கு பதிலளித்த அவர், பாகிஸ்தானை இன்னும் அதிகமாகத் தாக்கியிருக்க வேண்டும் என்று கூறினார். ஆபரேஷன் சிந்தூரைத் தொடர்ந்து அரசாங்கத்தின் ராஜதந்திர நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக உலகின் பல்வேறு பகுதிகளுக்கு அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் அனுப்பப்படுவது குறித்து கருத்து தெரிவித்த அவர், இந்தப் பிரதிநிதிகளால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. உறுப்பினர்கள் தங்கள் பொழுதை கழிப்பார்கள் என்பது அனைவருக்கும் தெரியும் என்று சுப்பிரமணியன் சுவாமி கூறினார்.

# பாகிஸ்தானில் இந்திய தூதரக அதிகாரி திடீர் வெளியேற்றம்


**இஸ்லாமாபாத், மே 23-**

இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரியை இந்தியா வெளியேற்றியதை அடுத்து, தங்கள் நாட்டில் உள்ள இந்திய தூதரக அதிகாரியை வெளியேற்றுவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றும் அதிகாரி ஒருவர், தனது அதிகாரப்பூர்வ அந்தஸ்துக்கு முரணான செயல்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் அவரை 24 மணி நேரத்தில் இந்தியாவை விட்டு வெளியேற வெளியுறவு அமைச்சகம் உத்தரவிட்டது. உளவு பார்த்ததன் அடிப்படையிலேயே அவர் வெளியேற்றப்பட்டதாகவும், கடந்த ஒரு வாரத்தில் இது இரண்டாவது நடவடிக்கை என்றும் இந்த விஷயத்தை நன்கு அறிந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து, இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரகத்தில் பணியாற்றும் ஒரு இந்திய அதிகாரியை வெளியேற்றுவதற்கான உத்தரவை பாகிஸ்தான் பிறப்பித்துள்ளது. பாகிஸ்தான் வெளியுறவு அலுவலகத்தின் அறிக்கையின்படி, "இந்திய தூதரகத்தில் பணியாற்றும் ஒரு அதிகாரியை, முரணான செயல்களில் ஈடுபட்டதற்காக பாகிஸ்தான் அரசு அவரை 24 மணி நேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டுள்ளது." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முடிவை தெரிவிக்க இந்திய தூதர் வெளியுறவு அமைச்சகத்திற்கு அழைக்கப்பட்டார்.

## 23-05-2025



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். வாகனங்களில் செல்கையில் வேகத்தை குறைத்து, விபத்தினைத் தவிர்க்கவும். உறவுகளிடையே நல்லுறவு ஏற்படுத்த முயலவும்.

**ரிஷபம்:-** படிப்பில் வெற்றிகள் படிப்படியாய் வரும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து மகிழ்வர். பலவழிகளிலும் பணவரவு அதிகரிக்கும். பெண்களால் இலாபம் ஏற்பட மனம் மகிழும்.

**மிதுனம்:-** செய்தொழிலில் புதிய உத்வேகம் பிறக்கும். அரசு பணியில் உள்ளவர்கள் பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு.

**கடகம்:-** தெய்வ நம்பிக்கையும், பாக்கிய விருத்தியும் ஏற்படும். கோவில் திருப்பணிகள் செய்வதில் விருப்பம் அதிகரிக்கும். வாழ்க்கையின் வசந்த காலம் ன்று நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**சிம்மம்:-** அரசு அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் முன்னேற்றம் ஏற்படும். மனைவியின் கலகத்தால் வீட்டில் குழப்பங்கள் ஏற்படலாம். இழப்பை தவிர்க்க உங்கள் பொருட்களை கவனமாக பாதுகாக்கவும்.

**கன்னி:-** புதிய தொழில் பயிற்சி மற்றும் கல்வியில் தேர்ச்சி ஏற்படும். வாக்கு வன்மையால் சம்பாத்தியம் உயரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவு ஏற்படும் தன வரவு மூலம் சந்தோஷம் நிலவும்.

**துலாம்:-** எதிர்பார்த்த தனவரவுகள் வந்து ஏற்றம் தரும். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகி, தக்க தருணத்தில் நல்ல நண்பர்கள் கடன் உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:-** உங்கள் திறமை முழுக்க காட்டிப் பணி புரிந்தாலும் உயர் அதிகாரிகள் குறையே சொல்வர். விபத்துக்களை தவிர்க்க, வேகம் குறைத்து வாகனங்களில் நிதானமாகச் செல்லவும்.

**தனுசு:-** வீட்டில் திருட்டை தவிர்க்க விழிப்புடன் இருத்தல் அவசியம். தாயின் உடல்நிலையில் அக்கறை தேவை. காரியத்தடைகள் மற்றும் பண இழப்புகள் ஏற்படும்.

**மகரம்:-** பணவரவுகள் அதிகரிப்பால் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குழந்தைகள் பால் அன்பும், அவர்களின் முன்னேற்றத்தில் ஆர்வம் ஏற்படும். மனைவியின் உதவிகள் மகிழ்ச்சி அளிக்கும்.

**கும்பம்:-** குடும்பத்தாரிடம் வீண் வாக்குவாதத்தில் ஈடுபடாது அனுசரித்துச் செல்வது அமைதி அளிக்கும். தோல்விகளைக் கண்டு துவண்டு விடாதீர்கள். தீவிரமாக முயன்றால் வெற்றி நிச்சயம்.

**மீனம்:-** பொருளாதார நிலை போற்றும் படியாக இருக்கும். வசீகரமான பேச்சால் வருமானம் கூடும். வருமான உயர்வால் வளமும் அதிகரிக்கும். விரும்பிய வாகனத்தில் வெளியூர் செல்வீர்கள்.

## ரயிலில் கடத்தப்பட்ட
# ரூ.32 லட்சம் ஹவாலா பணம் பறிமுதல்

**சென்னை, மே 23-**

ரயிலில் கடத்தப்பட்ட ஹவாலா பணம் ரூ.32 லட்சத்தை போலீசார் கைப்பற்றினர்.

ஐதராபாத்தில் இருந்து புதுச்சேரி செல்லும் புதுவை எக்ஸ்பிரஸ் ரயிலில் ஹவாலா பணத்தை கடத்தி செல்வதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து மாம்பலம் ரயில் நிலையத்தில், சந்தேகத்தின் பேரில், 3 பேரை பிடித்து அதிகாரிகள் விசாரணை நடத்தினர். அப்போது, ரூ.32 லட்சம் ஹவாலா பணம் பதுக்கி வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

ஹவாலா பணம் என்பது, பண பரிவர்த்தனையை மறைமுகமாக ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவது ஆகும். இது ஒரு சட்டவிரோத பண பரிமாற்ற முறையாகும், இது பொதுவாக பயங்கரவாதம், பணமோசடி போன்ற சட்ட விரோத செயல்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இது தொடர்பாக பெண் உட்பட 3 பேரிடம் மத்திய வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இவர்கள் நகை கடைக்கு பணத்தை கொண்டு செல்ல கடத்தி வந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இந்தியா - பாக். மோதலை தீர்த்து வைத்தது நான்தான்
## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீண்டும் பேச்சு

**வாஷிங்டன், மே 23-**

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான சமீபத்திய மோதலை தீர்த்து வைத்ததாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் கூறியுள்ளார்.

தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசாவுடனான சந்திப்பின் போது ஓவல் அலுவலகத்தில் பேசிய அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், நாங்கள் பாகிஸ்தானுடனும் இந்தியாவுடனும் என்ன செய்தோம் என்பதைப் பார்த்தால், நாங்கள் அந்த மோதலை முழுவதுமாக தீர்த்து வைத்தோம். நான் அதை வர்த்தகத்தின் மூலம் தீர்த்து வைத்தேன். அமெரிக்கா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் இரண்டு நாடுகளுடனும் பெரிய ஒப்பந்தம் செய்து வருகிறது.

இந்தியா பாகிஸ்தான் மோதலில் யாராவது கடைசியாக சுட வேண்டியிருந்தது. ஆனால் துப்பாக்கிச் சூடு மோசமாகிக்கொண்டே போனது. மோதல் பெரியதாகவும் நாடுகளுக்குள் ஆழமாகவும் சென்றது. நாங்கள் அவர்களிடம் பேசினோம், நாங்கள் அதை சரிசெய்து விட்டோம் என்று சொல்ல எனக்குப் பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன், இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஏதோ நடக்கிறது, அது ட்ரம்பின் தவறு என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் பாகிஸ்தானில் சில சிறந்த மனிதர்களும், சில நல்ல தலைவரும் உள்ளனர். இந்தியாவில் என் நண்பர் மோடி உள்ளார், அவர் ஒரு சிறந்த மனிதர், நான் அவர்கள் இருவரையும் அழைத்து பேசினேன். இது நல்ல விஷயம்'' என்று ட்ரம்ப் கூறினார். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பதட்டங்களைத் தீர்க்க தான் உதவியதாக அமெரிக்க அதிபர் பல முறை கூறி வருகிறார்.

## கர்நாடக மாநிலத்தில்
# காட்டு யானை தாக்கி 2 பேர் பலி

**பெங்களூரு, மே 23-**

கர்நாடக மாநிலம் குடகு மாவட்டம் பொன்னம்பேட்டை தாலுகா தேவரபுராவை சேர்ந்த அன்னையா (வயது41) மற்றும் மைசூர் மாவட்டம் எச்டி கோட் தாலுகா பல்லே வனப்பகுதியை சேர்ந்த சுஷில் (46) ராஜு மற்றும் இவரது மகன் சுதீப் உள்ளிட்டோர் தேவரபுராவில் இருந்து காபி தோட்டத்திற்கு வேலைக்கு சென்றனர்.

அப்போது அன்னையா பகுதியில் காட்டு யானையால் தாக்கப்பட்டு 2 பேரும் சம்பவ இடத்திலேயே இறந்தனர். இவர்கள் உடல்களை மண்டல வன அதிகாரி கங்காதர் தலைமையிலான வன குழுவினர் மீட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் காயம் அடைந்த ராஜு மற்றும் அவரது மகன் சுதீப் ஆகியோர் நகர அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கிரீஸில் நிலநடுக்கம்

**ஏதன்ஸ், மே 23-**

கிரீஸ் மற்றும் கிரீட் தீவுகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 6.1ஆக பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கமானது, இஸ்ரேல், எகிப்து, ஸிப்ரஸ் ஆகிய நாடுகளிலும் உணரப்பட்டது. உள்ளூர் நேரப்படி காலை 6:19 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், கிரீட்டின் வடக்கே 69 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக ஐரோப்பா-மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் ஆகியவற்றின் முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மலட்டாற்றில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



**சென்னை, மே 23-**

திருவெண்ணெய்நல்லூர் வட்டம், அரசூர்கிராமத்திலுள்ள மலட்டாற்றில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி உதவி வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், அரசூர்கிராமம், கிழக்குத் தெருவில் வசித்துவரும் பழனி என்பவரின் மகள்கள் சிவசங்கரி (வயது 18), அபினயா (வயது 14) மற்றும் ராஜேந்திரன் என்பவரின் மகன் ராஜேஷ் (வயது 13) ஆகிய மூவரும் கடந்த 21-ம் தேதி காலை அரசூர் கிராமத்திலுள்ள மலட்டாற்றில் குளித்துக் கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும்வேதனையும் அடைந்தேன்.

இச்சம்பவத்தில், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### வரும் சட்டமன்ற தேர்தலில்

# மதுரை மேற்கில் விஜய் போட்டி..?



**மதுரை, மே 23-**

மதுரை மேற்கு தொகுதியில் விஜய் களமிறங்க உள்ளாரா? என்ற எதிர்பார்ப்பு த.வெ.க. தொண்டர்களிடையே ஏற்பட்டுள்ளது.

2026 சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு உள்ள நிலையில் தற்போதே முன்னணி அரசியல் கட்சிகள் வாக்காளர்களை கவரும் வகையில் வியூகம் அமைத்து காய் நகர்த்தி வருகின்றன. தி.மு.க. சார்பில் மண்டலம் வாரியாக பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டு விட்டனர்.

இதற்கிடையே முதல்முறையாக தேர்தல் களம் காணும் தமிழக வெற்றிக் கழகமும் தேர்தல் ரேசில் தன்னை முன்னிலைப்படுத்தி வருகிறது. கோவையை தொடர்ந்து விரைவில் வேலூரில் 2 நாட்கள் பூத் கமிட்டி மாநாடு நடத்த திட்டமிட்டு அதற்கான பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது. அதேபோல் பிரமாண்ட மாநாடு நடத்தவும் முடிவு செய்யப்பட்டு அதற்கான ஆய்வு பணிகள் நடைபெறுகிறது. மேலும் கடந்த வாரம் முதல் மாவட்டச்செயலாளர்களை சென்னைக்கு அழைத்து ஆலோசனையும் நடத்தப்பட்டு வருகிறது.

வருகிற சட்டமன்ற தேர்தலில் த.வெ.க. தலைவர் விஜய் மதுரையில் போட்டியிட வாய்ப்புள்ளதாக அவரது கட்சி தொண்டர்கள் அங்கலாய்த்து வருகிறார்கள். ஏற்கனவே அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ சட்டமன்ற உறுப்பினராக உள்ள மதுரை மேற்கு தொகுதியை வரும் 2026 தேர்தலிலும் தக்கவைக்க பணிகளை தொடங்கியுள்ள நிலையில், தி.மு.க. தரப்பில் மேற்கு தொகுதியை கைப்பற்ற அமைச்சர் மூர்த்தி அங்கு பம்பரமாய் சுழன்று பணியாற்றி வருகின்றார்.

இந்நிலையில் த.வெ.க. சார்பில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்களில் மதுரை மேற்கு தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் நடிகர் விஜய்யை 1.10 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்தற்காக நன்றி என கூறி த.வெ.கவினர் ஒட்டியுள்ள போஸ்டர்களால் பரபரப்பு அதிகரித்துள்ளது. மேலும் அந்த போஸ்டரில் விஜய் முதல்வர் இருக்கையில் அமர்ந்து கையெழுத்து இடுவது போன்ற புகைப்படத்துடன் அச்சிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மதுரை மேற்கு தொகுதியில் விஜய் களமிறங்க உள்ளாரா? என்ற எதிர்பார்ப்பு த.வெ.க. தொண்டர்களிடையே ஏற்பட்டுள்ளது.

### ராஜஸ்தான், பிகானீரில் உள்ள

# கர்ணி மாதா கோவிலில் பிரதமர் மோடி வழிபாடு



**ஜெய்ப்பூர், மே 23-**

பிரதமர் மோடி கர்ணி மாதா கோவிலில் சாமி தரிசனம் செய்தார்.

பிரதமர் மோடி ராஜஸ்தானின் பிகானீர் மாவட்டத்திற்கு நேற்று வருகை தந்தார். ரூ.26 ஆயிரம் கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

முன்னதாக, பிரதமர் மோடி கர்ணி மாதா கோவிலுக்கு நேற்று காலை 10.30 மணியளவில் சென்றார். அவருடன் ராஜஸ்தான் முதல்வர் பஜன் லால் சர்மாவும் சென்றார். கோவிலில் சிறப்பு ஆராதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரதமர் மோடியின் வருகையால் நகர் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது. பிரதமர் மோடியின் வருகையை முன்னிட்டு, அவரை கவுரவிக்கும் வகையில் கோவிலில் சிறப்பு சடங்குகள் மற்றும் வழிபாடுகள் நடத்தப்பட்டன. சமீபத்தில் இந்திய ஆயுத படைகள் மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பின்னர் இந்த கோவிலுக்கு அவர் செல்வது முதன்முறையாகும். ராஜஸ்தானின் கலாசார மற்றும் ஆன்மிக பாரம்பரியத்துடனான பிரதமர் மோடியின் வலுவான தொடர்பை இது எடுத்து காட்டுகிறது.

# கிருஷ்ணா நதி நீர் பூண்டி ஏரியை வந்தடைந்தது

**திருவள்ளூர், மே 23-**

தெலுங்கு - கங்கை கால்வாய் மதகு சீரமைப்பு பணிக்காக நிறுத்தப்பட்டிருந்த கிருஷ்ணா நதி நீர், மீண்டும் கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்டு புதன் கிழமை இரவு பூண்டி ஏரியை வந்தடைந்தது.

தெலுங்கு- கங்கை திட்டத்தின் கீழ், சென்னையின் குடிநீர் தேவைக்காக ஜனவரி முதல் ஏப்ரல் வரை வழங்க வேண்டிய கிருஷ்ணா நதி நீரை வழங்கவேண்டும் எனக்கோரி, தமிழக நீர்வளத்துறை அதிகாரிகள் கடந்த மார்ச் மாதத்தில் கோரிக்கை வைத்தனர். இதையடுத்து, சென்னை குடிநீருக்காக ஆந்திர மாநிலம் - கண்டலேறு அணையில் இருந்து, தெலுங்கு - கங்கை திட்ட கால்வாய் மூலம் கிருஷ்ணா நதி நீரை கடந்த மார்ச் 24-ம் தேதி ஆந்திர நீர்வளத்துறையினர் திறந்தனர்.

இந்நிலையில், கிருஷ்ணா நதி நீர் திறப்பை, தெலுங்கு - கங்கை கால்வாயில், ஆந்திர மாநிலம் - ஸ்ரீகாளஹஸ்தியில் மதகு சீரமைப்பு பணி மேற்கொள்வதற்காக ஏப்.19-ம் தேதி ஆந்திர நீர்வளத்துறையினர் நிறுத்தினர். இதனால், கிருஷ்ணா நதி நீர் தமிழக எல்லைக்கு வருவது ஏப்.24-ம் தேதி, முற்றிலுமாக நின்றது. இச்சூழலில், தெலுங்கு-கங்கை கால்வாய் மதகு சீரமைப்பு பணி முடிவடைந்ததையடுத்து, மே 5-ம் தேதி மீண்டும் சென்னை குடிநீருக்காக கிருஷ்ணா நதி நீரை கண்டலேறு அணையில் இருந்து ஆந்திர நீர்வளத்துறையினர் , திறந்தனர்.

தொடக்கத்தில் விநாடிக்கு 500 கன அடி என, திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, கடந்த 19-ம் தேதி விநாடிக்கு 2,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர், 4 அல்லது 5 நாட்களில் தமிழக எல்லையான தாமரைக்குப்பம் ஜீரோ பாயிண்டுக்கு வரவேண்டிய நிலையில், 10 நாட்கள் தாமதமாக புதன்கிழமை காலை 7 மணிக்கு வந்தடைந்தது. அவ்வாறு வந்த கிருஷ்ணா நதி நீர், 25 கி.மீ., தூரம் பயணித்து, நேற்று (மே 21) இரவு பூண்டி ஏரிக்கு வந்தடைந்தது. கிருஷ்ணா நதி நீர் வியாழக்கிழமை காலை நிலவரப்படி விநாடிக்கு 115 கன அடி என, பூண்டி ஏரிக்கு வந்து கொண்டிருக்கிறது.

# ஜூன் 12-ல் தண்ணீர் திறப்பு எதிரொலி: மேட்டூர் அணையில் கலெக்டர் ஆய்வு

**மேட்டூர், மே 23-**

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு ஜூன் 12-ம் தேதி முதல்வர் தண்ணீர் திறந்து வைக்கிறார். இதனையொட்டி, மேட்டூர் அணையில் சேலம் மாவட்ட ஆட்சியர் பிருந்தா தேவி நேற்று (மே 22) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காவிரி டெல்டா பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து வருகிற ஜூன் 12-ம் தேதி தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை தர உள்ளார். இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உள்ளிட்டவை குறித்து சேலம் மாவட்ட ஆட்சியர் பிருந்தா தேவி நேற்று (மே 22) ஆய்வு செய்தார். அப்போது, மேட்டூர் அணையின் வலது கரையில் மேடை அமைக்கப்பட உள்ள இடம், மேல்மட்ட மதகில் மின் விசையை இயக்கும் இடம் உள்ளிட்ட இடங்களில் ஆய்வு செய்தார். தொடர்ந்து, நீர்வளத்துறை அதிகாரிகளிடம் நீர்வரத்து, நீர் வெளியேற்றம், பாசனத்துக்கு நீர் திறப்பு உள்ளிடவைகளை கேட்டறிந்தார். இந்த ஆய்வின் போது, நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் செல்வராஜ், கோட்டாட்சியர் சுகுமார், வட்டாட்சியர் ரமேஷ், டிஎஸ்பி ஆரோக்கியராஜ், உதவி பொறியாளர் சதிஷ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது. அதன்படி, அணைக்கு நேற்று முன்தினம் (மே 21) விநாடிக்கு 12,819 கன அடியாக இருந்த நிலையில் நேற்று (மே 22) விநாடிக்கு 13,606 கன அடியாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம் 110.03 அடியில் இருந்து, நேற்று 110.77 அடியாக உயர்ந்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1,000 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

### ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை:

# இந்தியாவுக்கு யூ.ஏ.இ., ஜப்பான் ஆதரவு



**புதுடெல்லி, மே 23-**

பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய அரபு அமீரகம், ஜப்பான் நாடுகள் தங்களின் ஆதரவினை தெரிவித்துள்ளன.

ஆபரேஷன் சிந்தூரின் ஒரு பகுதியாக பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் முயற்சியை விளக்கும் விதமாக சிவசேனா எம்.பி. ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழு, ஐக்கிய அரபு அமீரகத்தின் பாதுகாப்புக் குழு தலைவர் அலி ரஷித் அல் நுவாமி மற்றும் அமைச்சர் சேக் நஹாயனா ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்த சந்திப்பு குறித்து ஷிண்டே கூறுகையில், "ஐக்கிய அரபு அமீரக பிரதிநிதிகளுடனான சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பயங்கரவாதத்துக்கான எதிராக இந்தியாவுடன் ஐக்கிய அரபு அமீரகம் தோளோடு தோள் நிற்கும். மதத்தின் போர்வையில் நடக்கும் அனைத்து வடிவிலான பயங்கரவாதத்தையும் ஐக்கிய அரபு அமீரக அதிகாரிகள் நிராகரித்தனர் என்றார்.

இதேபோல், ஜப்பான் சென்றுள்ள ஜே.டி.யு. எம்.பி. சஞ்சய் குமார் ஜா தலைமையிலான குழு ஜப்பானின் வெளியுறவுத்துறை அமைச்சர் டகேஷி லவ்யாவைச் சந்தித்தது. அப்போது, பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் போராட்டத்துக்கு வலுவான ஆதரவினை அளித்த ஜப்பான், இந்தியாவின் நிதானத்தை வெகுவாக பாராட்டியது.

# கேரளாவில் 182 பேருக்கு கொரோனா பாதிப்பு: சுகாதார அமைச்சர் எச்சரிக்கை

**திருவனந்தபுரம், மே 23-**

மே மாதத்தில் கேரளாவில் 182 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய கேரள சுகாதாரத் அமைச்சர் வீணா ஜார்ஜ், "தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கொரோனா பாதிப்பு அதிக அளவில் பதிவாகி வருகின்றன. மேலும் கேரளாவிலும் கொரோனா அதிகரிப்புக்கான வாய்ப்பு உள்ளது. தீவிரம் அதிகமாக இல்லாவிட்டாலும், தற்காப்பு முக்கியமானது.

இந்த சூழ்நிலையை எதிர்கொண்டு நடவடிக்கை குறித்து திட்டமிட மாநில விரைவு பதிலளிப்பு குழுவின் உயர்மட்டக் கூட்டம் கூட்டப்பட்டது.

அறிகுறி உள்ள நபர்களுக்கு கோவிட்-19 பரிசோதனை அதிகரிக்கப்படும் என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மருத்துவமனைகளில் ஆர்.டி.பி.சி.ஆர். கருவிகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் முகக்கவசங்கள் கிடைப்பதை உறுதி செய்ய மருத்துவமனைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சுகாதார ஊழியர்கள் எல்லா நேரங்களிலும் முகக் கவசம் அணிய வேண்டும்.

தற்போதைய கோவிட் வகைகள் அதிக அளவில் பரவும் தன்மையை உடையவை என்றாலும், அதன் தீவிரம் அதிகமாக இல்லை. இருப்பினும், இந்த தொற்று நோயைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அவசியமாகும்" என்று அமைச்சர் தெளிவுப்படுத்தினார். கேரளாவில் மே மாதத்தில் கொரோனா பாதிப்புக்குள்ளான 182 பேரில், கோட்டயத்தில் அதிகபட்சமாக 57 பேரும், அதைத் தொடர்ந்து எர்ணாகுளத்தில் 34 பேரும், திருவனந்தபுரத்தில் 30 பேரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

# சல்மான் கான் வீட்டில் அத்துமீறி நுழைய முயன்ற 2 பேர் கைது



**மும்பை, மே 23-**

மும்பையிலுள்ள பிரபல பாலிவுட் நடிகர் சல்மான் கானின் இல்லத்தில் இரண்டு வெவ்வேறு முறை அத்துமீறி நுழைய முயன்ற 2 பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மும்பை பாந்திரா காவல் நிலையத்தில், பிரபல பாலிவுட் நடிகர் சல்மான் கானின் இல்லத்தில், கடந்த மே 20 மற்றும் மே 21 ஆகிய தேதிகளில், ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் அத்துமீறி நுழைய முயன்றதாக இரண்டு வெவ்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்கு பாந்திரா பகுதியிலுள்ள கேலக்ஸி அபார்ட்மண்ட்ஸ் எனும் அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடத்தினுள், சல்மான் கானுக்குச் சொந்தமான வீடொன்று உள்ளது. அங்கு தான், அவர் வசித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், கடந்த மே 20 ஆம் தேதியன்று காலை, ஜித்தேந்திரா குமார் சிங் (வயது 23) என்ற நபர், சல்மான் கானின் வீட்டைச் சுற்றி வந்துள்ளார். அப்போது, அங்கு சல்மான் கானின் பாதுகாப்பிற்காகப் பணியமர்த்தப்பட்டிருந்த காவல் துறை அதிகாரி ஒருவர் ஜித்தேந்திராவை அங்கிருந்து கிளம்பச் சொல்லியதாகக் கூறப்படுகிறது. இதனால், ஏற்பட்ட வாக்குவாதத்தில் அவர் தனது செல்போனை கீழே வீசி உடைத்துள்ளார். பின்னர், அன்று மாலை அவர், அதே கட்டடத்தில் வசிக்கும் மற்றொரு நபருக்குச் சொந்தமான வாகனத்தின் மூலம் உள்ளே நுழைய முயன்றபோது, போலீஸாரிடம் சிக்கியுள்ளார். இதனால், அவரை உடனடியாக பாந்திரா காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதேபோல், கடந்த மே 21 ஆம் தேதியன்று, மற்றொரு பெண் உரிய அனுமதியின்றி அந்தக் கட்டடத்தினுள் நுழைந்து, சல்மான் கானின் வீட்டின் வாசல் வரைச் சென்றதாக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# யு.பி.ஐ. பண மோசடியை தடுக்க புதிய நடைமுறை

**புதுடெல்லி, மே 23-**

யு.பி.ஐ. பணப் பரிவர்த்தனைகளில் மோசடியைத் தடுக்க ஜூன் 30ம் தேதி முதல் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இந்திய மக்களிடையே டிஜிட்டல் பரிவர்த்தனை (யு.பி.ஐ.) அதிகரித்து வருகிறது. இதில், கூகுள் பே, போன் பே, பே டி.எம்., ஆகிய செயலிகளை அதிகம் பேர் பயன்படுத்துகிறார்கள் இந்த நிலையில் யு.பி.ஐ. பணப் பரிவர்த்தனைகளில் மோசடியைத் தடுக்க ஜூன் 30ம் தேதி முதல் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்பட உள்ளது. யு.பி.ஐ. பணப் பரிவர்த்தனைகளில் தற்போதுள்ள நடைமுறைகளின் படி பணத்தைப் பெறுபவர், தன் பெயரை அவர்களே நிர்ணயித்துக் கொள்ள முடியும். புதிய நடைமுறைபடி பணத்தை பெறுபவரின் பெயர், அவருடைய வங்கிக் கணக்கில் எப்படி உள்ளதோ அதையே காட்டும். இதன்மூலம் சரியான நபருக்குத்தான் பணத்தை அனுப்பியுள்ளோம் என்பதை நாம் உறுதி செய்து கொள்ள முடியும்.

### உ.பி.யில் திடீர் வானிலை மாற்றம்:

# புயல், மழைக்கு 34 பேர் பலி

**லக்னோ, மே 23-**

உத்தரபிரதேசத்தில் கடந்த 24 மணி நேரத்தில் பெய்த கனமழை மற்றும் புயல் காரணமாக 34 பேர் உயிரிழந்தனர்.

உத்தரபிரதேசத்தில் கடந்த 24 மணி நேரத்தில் பலத்த மழை கொட்டி தீர்த்துள்ளது. திடீர் வானிலை மாற்றம் காரணமாக பல மாவட்டங்களில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது. காஸ்கஞ்ச் மற்றும் பதேபூர் பகுதிகள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன. மரங்கள் வேரோடு சாய்து, மின்சாரம் துண்டிக்கப்பட்டு உள்ளன. நொய்டாவில், பல மரங்கள் வேரோடு சாய்ந்து வாகனங்கள் மீது விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. உத்தரபிரதேசத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு பல்வேறு மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் பலத்த மழை மற்றும் புயல் காரணமாக 34 பேர் உயிரிழந்தனர். புயல், மழை மற்றும் ஆலங்கட்டி மழை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நிவாரணப் பணிகளை முழு வேகத்தில் மேற்கொள்ளுமாறு மாவட்ட அதிகாரிகளுக்கு உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவுறுத்தி உள்ளார்.

# தி.மு.க. அரசுக்கு களங்கம் கற்பிக்கவே அமலாக்கத்துறை மூலம் சோதனை

## ஆர்.எஸ்.பாரதி கடும் குற்றச்சாட்டு



**சென்னை, மே 23-**

சட்டமன்ற தேர்தல் நெருங்குவதால் தி.மு.க. அரசுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் அமலாக்கத்துறை சோதனை நடைபெற்றது என்று ஆர்.எஸ்.பாரதி கூறியுள்ளார்.

டாஸ்மாக் வழக்கில் அமலாக்கத்துறையின் விசாரணைக்கு சுப்ரீம் கோர்ட்டு தடை விதித்த நிலையில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

டாஸ்மாக் வழக்கு தொடர்பான சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பை தி.மு.க. வரவேற்கிறது. அமலாக்கத்துறையின் அக்கப்போர்களுக்கு முடிவு கட்டும் வகையில் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அமலாக்கத்துறை என்பது பிளாக்மெயில் அமைப்பை போல் செயல்படுகிறது. அமலாக்கத்துறையை தவறாக பயன்படுத்துவதை மத்திய அரசு இனி மேலாவது நிறுத்த வேண்டும். சட்டமன்ற தேர்தல் நெருங்குவதால் அமலாக்கத்துறை சோதனை நடைபெறுகிறது. தி.மு.க. அரசுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் அமலாக்கத்துறை சோதனை நடைபெற்றது என்றார்.

### ஜம்மு-காஷ்மீரில் என்கவுன்டர்:

# 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

**ஸ்ரீநகர், மே 23-**

ஜம்மு காஷ்மீரின் சிங்போரா சத்ரூவில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 2 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். அங்குள்ள கிஷ்த்வார் மாவட்டத்தின் சிங்போரா பகுதியில் உள்ள சத்ரூவில் பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் இந்தத் துப்பாக்கிச் சண்டை நடந்தது. "ஆபரேஷன் ட்ருஷி' என்று பெயரிடப்பட்ட இந்த கூட்டு நடவடிக்கையில் துப்பாக்கிச் சண்டை மூண்டதும் கூடுதல் படைகள் நிலைநிறுத்தப்பட்டன. பயங்கரவாதிகளை அழித்தொழிக்கும் முயற்சிகள் நடந்து வருகின்றன" என்று ராணுவத்தின் வொயிட் கார்ப்ஸ் தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளது. சிங்போராவின் சத்ரூ பகுதியில், இரண்டு பாரா துணை பாதுகாப்புப்படை, ராணுவத்தின் 11 ஆர் ஆர் அசாம் ரைபில்ஸ் மற்றும் கிஷ்த்வார் எஸ்.ஓ.ஜி. இணைந்து கூட்டு நடவடிக்கை மேற்கொண்டது. இரண்டு பயங்கரவாதிகள் கொல்லப்பட்ட நிலையில், கைபுல்லா உட்பட மூன்று, நான்கு பயங்கரவாத குழுக்கள் சத்ரூ காட்டுப்பகுதிகளில் பாதுகாப்பு படையினரின் முற்றுகைக்குள் சிக்கியிருப்பதாக நம்பப்படுகிறது. இதனிடையே ஒருவாரத்துக்கு முன்பாக, ஜம்மு காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தின் டிரால் பகுதியின், நாதிர் கிராமத்தில் நடந்த தனித்தனி பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஜெய்ஷ் இ முகம்மது அமைப்பைச் சேர்ந்த மூன்று பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்த துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் பரந்த அளவிலான நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஜம்மு காஷ்மீர் முழுவதும் உள்ள பயங்கராவதிகளின் சொத்துகளை அழிக்கும் முயற்சியை அதிகாரிகள் தொடங்கியுள்ளனர்.

# பாகிஸ்தான் தூதரக 2-வது அதிகாரி வெளியேற மத்திய அரசு உத்தரவு

**புதுடெல்லி, மே 23-**

டெல்லி பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றும் மற்றொரு அதிகாரியையும் 24 மணி நேரத்தில் வெளியேற மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. பஹல்காம் தாக்குதலை அடுத்து இந்தியா- பாகிஸ்தான் இடையே 4 நாள் போர் நடைபெற்றது. இந்நிலையில் உளவுப் பணியில் ஈடுபட்டதாக டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவரை கடந்த 13-ல் வெளியேற மத்திய அரசு உத்தரவிட்டது. இந்நிலையில் டெல்லியில் பாகிஸ்தான் தூதரகத்தில் பணியாற்றும் மற்றொரு அதிகாரியையும் 24 மணி நேரத்தில் வெளியேற மத்திய அரசு உத்தரவிட்டது. அவர் தனது அந்தஸ்துக்கு ஏற்ற பணியில் ஈடுபடாமல் பிற பணிகளில் ஈடுபட்டதால், அவரை நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், பாக். தூதரக அதிகாரிகள் தங்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்பு சலுகையை எந்த விதத்திலும் தவறாக பயன்படுத்த வேண்டாம் என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




பள்ளிகள் திறக்க இன்னும் 10 நாள்கள் மட்டுமே இருக்கும் நிலையில், தனியார் பள்ளிகளில் கல்வி உரிமைச் சட்டத்தின்படியான மாணவர் சேர்க்கையை தமிழக அரசு விரைவுபடுத்த வேண்டும். அதற்கான அறிவிக்கையை தமிழக அரசு உடனடியாக வெளியிட்டு, மாணவர்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- அன்புமணி**



அதிபர் ட்ரம்ப், இந்தியா-பாகிஸ்தான் போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கு தானே காரணம் எனத் திரும்பத் திரும்ப கூறி வருகிறார். அவரது உற்ற நண்பரான பிரதமர் மோடியோ அதுகுறித்து மவுனம் காக்கிறார். ட்ரம்ப் பிரதமர் மோடி, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் இருவரையும் பாராட்டுகிறார். இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

**- ஜெய்ராம் ரமேஷ்**



நாம் தமிழர் கட்சியில் தலைமை ஒருங்கிணைப்பாளராக ஆன பிறகு அரசியலில் நான் எந்த கருத்துக்களை பேசுகிறேன் என்பதை தான் பார்க்க வேண்டும். அதை விட்டு விட்டு திராவிட அரசியலை பேசுபவர்கள் அச்சத்தில் பரப்பி வரும் எனது பழைய வீடியோக்களை பற்றி நீங்கள் கவலைக் கொள்ளாதீர்கள்.

**- சீமான்**



வரும் ஜனவரி மாதம் 9-ம் தேதி கடலூர் மாவட்டத்தில் தேமுதிக மாநாடு நடத்தப்பட உள்ளது. அந்த மாநாட்டில் யாருடன் கூட்டணி ?, எத்தனை தொகுதி ?, கட்சியின் வேட்பாளர்கள் யார் ? என்பது குறித்து அறிவிக்க உள்ளோம். அதற்கு முன்பாக 234 தொகுதிகளிலும் தொகுதி பொறுப்பாளர்களை அறிவித்து, அதற்கான பணிகளை தொடங்க உள்ளோம்.

**- பிரேமலதா**

### தேவாலா கிராமத்தில் நடைபெற்ற

# மக்கள் தொடர்பு முகாமில் 157 பயனாளிகளுக்கு ரூ.4.47 கோடி மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்



ஊட்டி மே.23-

நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம் தேவாலா கிராமம் ஹோலிகிராஸ் கான்வெண்ட் மெட்ரிகுலேஷன் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கலந்து கொண்டு 157 பயனாளிகளுக்கு ரூ.4.47 கோடி மதிப்பில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கலெக்டர் தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க ஒவ்வொரு மாதமும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் நேரடியாக கிராமப் பகுதிகளுக்கு சென்று மக்கள் தொடர்பு முகாம் மூலமாக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் பொதுமக்களுக்கு தெரிவிப்பதோடு தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குவதுதான் மக்கள் தொடர்பு முகாமின் முக்கிய நோக்கமாகும். அதன்படி இன்று நடைபெற்ற இம்முகாமில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதாரம் சார்பில் 2 மகளிர் சுய உதவிக்குழுக்களிற்கு ரூ.19 லட்சம் மதிப்பில் தொழில் தொடங்க வங்கிகடன் இணைப்பு பெறுவதற்கான ஆணைகளையும் மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.9.07 இலட்சம் மதிப்பில் கல்வி கடனுதவி பெறுவதற்கான ஆணைகளையும் தோட்டக்கலைத்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பில் மண்புழு உரக்கூடாரம் அமைப்பதற்கான நிதியுதவியும் மாநில தோட்டக்கலை வளர்ச்சித்திட்டத்தின்கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.99930- மதிப்பில் உதவித்தொகையும் 2 பயனாளிகளுக்கு ரூ.50442- மதிப்பில் தெளிப்பு நீர் பாசன கருவிகளும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.5000- மதிப்பில் மருந்து பெட்டகங்களையும் 5 பயனாளிகளுக்கு ரூ.10000- மதிப்பில் ஊட்டச்சத்து பெட்டகங்களையும் 3 பயனாளிகளுக்கு ரூ.15 இலட்சம் மதிப்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுக்கான புதிய அட்டைகளையும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.50000- மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளும் 1 பயனாளிக்கு ரூ.10000- மதிப்பில் திருமண உதவித்தொகையும் 4 பயனாளிகளுக்கு ரூ.80000- மதிப்பில் இயற்கை மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும் 7 பயனாளிகளுக்கு ரூ.8400- மதிப்பில் முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும் 48 பயனாளிகளுக்கு ரூ.3.92 கோடி மதிப்பில் இலவச வீட்டு மனைப் பட்டாக்களையும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.80000- மதிப்பில் கிறிஸ்துவ மகளிர் சங்கத்திற்க்கான காசோலைகளையும் 51 பயனாளிகளுக்கு ரூ.6.30 லட்சம் மதிப்பில் முஸ்லீம் மகளிர் சங்கத்திற்கான காசோலைகளையும் 5 பயனாளிகளுக்கு ரூ.25000- மதிப்பில் இலவச தையல் இயந்திரங்களையும் என மொத்தம் 157 பயனாளிகளுக்கு ரூ.4.47 கோடி மதிப்பில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

மேலும் கூடலூர் பகுதியில் செயல்பட்டு வரும் அரசு தலைமை மருத்துவமனை தற்போது பொதுமக்கள் பலராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த மருத்துவமனையில் தற்போது மருத்துவ பணியிடங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் அரசு மருத்துவமனையை பயன்படுத்தி கொள்ள வேண்டும். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க ஏறக்குறைய 30 வருடத்திற்கு பிறகு 1000 பட்டாக்கள் வழங்கும் நிகழ்வு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இதில் கூடலூர் பந்தலூர் பகுதிகளில் ஏறத்தாழ 600 பட்டாக்கள் வழங்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் சொந்தமாக வீடு இல்லாத ஏழை எளிய மக்களுக்கு கூடலூர் பகுதியில் சுமார் ரூ.30 கோடி மதிப்பீட்டில் புதிய கலைஞர் நகர் என்ற பெயரில் ஏறக்குறைய 300 வீடுகள் கட்டப்படுகிறது.

இதுபோன்று தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல்வேறு திட்டங்களை அறிவித்து அதனை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. எனவே பொதுமக்கள் அத்திட்டங்கள் குறித்து தெரிந்துகொண்டு பயன்பெற வேண்டும் எனவும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் அனைத்து மனுக்களையும் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அனுப்பி வைத்து அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார். அதனைத் தொடர்ந்து கூடலூர் ஐடியல் மெட்ரிக் மேல் நிலைப் பள்ளியில் பயின்ற 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 600க்கு 587 மதிப்பெண் பெற்ற மாணவி அக்ஷயா திலிப் அவர்களை வாழ்த்தி பாராட்டி நினைவு பரிசினை வழங்கி மாவட்ட முஸ்லீம் ஃ கிறிஸ்துவ மகளிர் உதவும் சங்கத்திற்கு நன்கொடை வழங்கிய நபர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவபடுத்தினார். இம்முகாமில் கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் பொன் ஜெயசீலன் உதவி வன பாதுகாவலர் கருப்பையா குன்னூர் சார் ஆட்சியர் ஃ கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) சங்கீதா உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு மாவட்ட நீர்வளத்துறையின் சார்பில்

# காளிங்கராயன் வாய்க்கால் வலது கரையில் அமைந்துள்ள பேபி வாய்க்கால் தூர்வாரும் பணி: அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்தார்



ஈரோடு மே.23-

ஈரோடு மாவட்டம் காளிங்கராயன் வாய்க்கால் வலது கரையில் அமைந்துள்ள பேபி வாய்க்கால் தூர்வாரும் பணியினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

ஈரோடு மாவட்டத்தில் பவானி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள காளிங்கராயன் அணைக்கட்டிலிருந்து காளிங்கராயன் வாய்க்கால் மூலம் 15,743 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. காளிங்கராயன் வாய்க்காலில் மைல் 0/0 முதல் 12/3 வரை கழிவுநீர் கலக்காமல் இருக்க வலது கரையில் பேபி வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. இப்பேபி வாய்க்காலானது மண் மற்றும் புதர்களால் நிரம்பியுள்ளதால் பேபி வாய்க்கால் சரகம் மைல் 0/0 முதல் 12/3 வரை சுமார் 20 கி.மீ நீளத்திற்கு தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள ரூ.28.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இன்றைய தினம் விவசாயிகளின் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில் பேபி வாய்க்கால் தூர்வாரும் பணியினை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஒரு மாத காலத்திற்குள்ளாக இப்பணிகளை முடித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் காளிங்கராயன் வாய்க்காலில் மற்ற முன்னேற்ற பணிகளை செயல்படுத்துவதற்காக அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது. காளிங்கராயன் வாய்க்காலை தூய்மையாக பராமரிக்க வேண்டும், தண்ணீர் வீணாகாமல் பயன்படுத்தும் வகையில் அமைக்க வேண்டும் என்பது தான் அரசின் நோக்கம்.

அதேபோல தமிழ்நாடு முதலமைச்சர் ஈரோடு மாவட்டத்திற்கென பல்வேறு திட்டங்களை வழங்கியுள்ளார்கள். மேலும் அத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை கண்காணித்திட துணை முதலமைச்சர் அவர்களை நியமித்துள்ளார்கள். அந்த வகையில், ஈரோடு மாவட்டத்தில் சோலார் பேருந்து நிலையம் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. மேலும் சத்தி சாலையில் பேருந்து நிலையம் அமைக்க நிலம் எடுப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதேபோல நேற்று ஈரோடு மாவட்டத்தில் தோழி விடுதி அமைத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்துள்ளார்கள். இதுபோன்ற மக்கள் நல திட்டப்பணிகள் ஈரோடு மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கண்காணிப்பு பொறியாளர் (பொதுப்பணித்துறை, நீர்வளம்) கோபி, செயற்பொறியாளர் திருமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் உதயகுமார், உதவி பொறியாளர் சபரிநாதன், ஈரோடு வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஊட்டியில் மறைந்த முன்னாள் அணு விஞ்ஞானி எம்.ஆர்.சீனிவாசன் உடலுக்கு 30 துப்பாக்கி குண்டுகள் முழங்க இறுதி மரியாதை



ஊட்டி மே.23-

ஊட்டியில் மறைந்த முன்னாள் அணு விஞ்ஞானி எம்.ஆர்.சீனிவாசன் உடலுக்கு 30 துப்பாக்கி குண்டுகள் முழங்க இறுதி மரியாதை செலுத்தப்பட்டது.

கர்நாடக மாநிலம் பெங்களூருவை சேர்ந்தவர் எம்.ஆர்.சீனிவாசன் 1930-ல் பிறந்த இவர் 1955-ம் ஆண்டு இந்திய அணுசக்தி துறையில் பணியில் சேர்ந்தார். இந்தியாவின் முதல் அணு ஆராய்ச்சி உலையான அப்சராவின் கட்டுமானத்தில் டாக்டர் ஹோமி பாபாவுடன் இணைந்து பணியாற்றிய அவர் 1959-ம் ஆண்டு இந்தியாவின் முதல் அணு மின் நிலையத்தின் கட்டுமானத்திற்கான முதன்மை திட்டப் பொறியாளராக நியமிக்கப்பட்டார்.

இதைத்தொடர்ந்து 1967-ம் ஆண்டு சென்னை அணுமின் நிலையத்தின் தலைமை திட்ட பொறியாளராக பொறுப்பேற்ற இவர் 1984 -ல் அணுசக்தி வாரியத்தின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். 1987-ம் ஆண்டு அணுசக்தி கழகத்தின் தலைவராகவும் அணுசக்தி துறையில் செயலாளராகவும் இவர் நியமிக்கப்பட்டவர்.

இந்தியாவின் அணுசக்தி திட்டத்திற்கு இவர் ஆற்றிய சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக நாட்டின் மிக உயர்ந்த விருதான பத்ம விபூஷன் விருதை 2015-ம் ஆண்டு இந்திய அரசு இவருக்கு வழங்கி கவுரவித்தது.

இந்தியாவின் அணுசக்தி திட்டத்தை தொடர்ந்து வடிவமைத்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல பதவிகளை வைத்தவர் டாக்டர் எம்.ஆர். சீனிவாசன் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு நீலகிரி மாவட்டம் ஊட்டியில் வசித்து வந்தார். கடந்த சில நாட்களாக வயது மூப்பு காரணமாக உடல் நலக்குறைவு ஏற்பட்டு இருந்த எம்.ஆர்.சீனிவாசன் கடந்த 20-ந் தேதி காலை காலமானார்.

அவருடைய உடலுக்கு அரசு சார்பில் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். இந்தநிலையில் அவரது உடல் நேற்று அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது. ஊட்டியிலிருந்து அவரது உடல் வெலிங்டனில் உள்ள மின் மயானத்துக்கு ஆம்பூலன்ஸ் வாகனம் மூலம் கொண்டு செல்லப்பட்டது. அங்கு தமிழக போலீசார் 30 குண்டுகள் முழங்க அரசு மரியாதை செலுத்தப்பட்டது. மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். அரசு மரியாதைக்குப் பின்னர் அவரது உடலை உறவினர்கள் மின் மயானத்துக்கு கொண்டு சென்று தகனம் செய்தனர். இதில் அவரது மனைவி கீதா சீனிவாசன் மகள் சாரதா மகன் ரகுவீர் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் எட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கேர்பெட்டா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ரூ.28 லட்சம் கடனுதவிகள்

## இணைப்பதிவாளர் இரா.தயாளன் வழங்கினார்



ஊட்டி மே.23-

கேர்பெட்டா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.28 லட்சம் கடனுதவிகளை மண்டல இணைப்பதிவாளர் இரா.தயாளன் வழங்கினார்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டாரம் கேர்பெட்டா கிராமத்தில் உள்ள கேர்பெட்டா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் 21.05.2025 அன்று நீலகிரி மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இரா. தயாளன் தலைமையில் நடைபெற்ற கடன் வழங்கும் நிகழ்வில் இணைப்பதிவாளர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 2800000 (இருபத்தெட்டு இலட்சம்) மதிப்பிலான கடன் அனுமதி ஆணை வழங்கப்பட்டது. இதில் சாய் லோட்டஸ் மகளிர் சுய உதவி குழு லட்சுமி நாராயணன் மகளிர் சுய உதவி குழு ஸ்ரீ சக்தி மகளிர் சுய உதவிக்குழு ஆகிய மூன்று மகளிர் குழுக்களுக்கு தலா 600000- வீதம் 1800000- கடனாக வழங்கப்பட்டது. மேலும் நட்பு மகளிர் சுய உதவி குழுவிற்கு ரூ. 1000000- (பத்து இலட்சத்திற்கான) கடன் அனுமதி ஆணையினை மண்டல இணைப்பதிவாளர் பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சங்கத்தின் செயலாட்சியர் கோவிந்தராஜ் கூட்டுறவு சார்பதிவாளர் (பொது விநியோக திட்டம்) ரா. சுப்பிரமணி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கோத்தகிரி சரக மேற்பார்வையாளர் பால்முருகன் சங்க செயலாளர் நிஜலிங்கப்பா ஆகியோர் உடன் இருந்தனர்.

# 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை ஜூன் மாதத்தில் குழந்தைகள் மையத்தில் தவறாது சேர்க்க வேண்டும்

## நீலகிரி கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவுறுத்தல்

ஊட்டி மே.23-

2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை ஜூன் மாதத்தில் குழந்தைகள் மையத்தில் தவறாது சேர்க்க வேண்டும் என நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு-

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் மூலம் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியினை மேம்படுத்தும் பொருட்டு நமது மாவட்டத்தில் செயல்படும் 492 குழந்தைகள் மையங்களில் சத்துமாவு ஊட்டச்சத்துடன் கூடிய கலவை உணவு மற்றும் முன்பருவக் கல்வி போன்றவை வழங்கப்படுகிறது. குறிப்பாக 2 வயது முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு குழந்தைகள் மையத்தில் முறைசாரா முன்பருவக் கல்வி செய்கைப் பாடல் கதைவிளையாட்டுக் கல்வி உபகரணங்கள் ஆகியவற்றின் மூலம் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் குழந்தைகளின் உடல் மொழி மனம் சமூகம் மற்றும் அறிவு வளர்ச்சிக்கு தேவையானவற்றை ஆடிப்பாடி விளையாடு பாப்பா எனும் சிறப்பு பாடத் திட்ட திருப்புதலுடன் 12 மாதங்களுக்கும் நடைமுறைப் படுத்தப்படுகிறது. மேலும் குழந்தைகளின் வளர்ச்சி கண்காணிக்கப்பட்டு பள்ளிச் செல்ல ஆயத்தப் படுத்தப்படுகின்றனர். அங்கன்வாடி பணியாளர்கள் தற்போது வீடுகள்தோறும் குழந்தைகள் சேர்க்கை பணி மேற்கொண்டு வருகிறார்கள். எனவே பெற்றோர்கள் தங்களது 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை ஜீன் 2025-ம் மாதத்தில் குழந்தைகள் மையத்தில் தவறாது சேர்த்திடவும் குழந்தைகள் மையங்களில் குழந்தைகளுக்கான ஆதார் அட்டை வழங்கும் பணியும் நடைப்பெற்று வருவதால் அச்சேவையையும் பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கேட்டுக் கொண்டுள்ளார்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்

# ஈரோடு மாவட்டம் நம்பியூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய்த் தீர்வாயம்

## கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடந்தது



ஈரோடு மே.23-

ஈரோடு மாவட்டம் நம்பியூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாய அலுவலர் /கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நம்பியூர் உள்வட்டத்தைச் சேர்ந்த கிராமங்களுக்கு 1434-ம் பசலி ஆண்டிற்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வருவாய் தீர்வாய அலுவலர் / கலெக்டர் தெரிவித்ததாவது

ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வட்டங்களிலும் 1434-ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் தொடங்கப்பட்டு 29.05.2025 வரை நடைபெறவுள்ளது. அதன்படி கோபிசெட்டிபாளையம் சத்தியமங்கலம் மற்றும் பெருந்துறை ஆகிய வட்டங்களில் 22.05.2025 முதல் 29.05.2025 வரையிலும் அந்தியூர் வட்டத்தில் 22.05.2025 முதல் 28.05.2025 வரையிலும் பவானி நம்பியூர் ஈரோடு மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி ஆகிய வட்டங்களில் 22.05.2025 முதல் 27.05.2025 வரையிலும் தாளவாடி வட்டத்தில் 22.05.2025 அன்றும் (சனி ஞாயிறு விடுமுறை நாட்கள் மற்றும் திங்கள்கிழமை நீங்கலாக) அந்தந்த வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் நடைபெறுகிறது. எனவே பொது மக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை அந்தந்த வருவாய் தீர்வாய அலுவலர்களிடம் சமர்ப்பித்து உரிய நிவாரணம் தேடிக்கொள்ளலாம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நம்பியூர் வட்டம் நம்பியூர் உள்வட்டத்தைச் சேர்ந்த புலவபாளையம் ஒலாலக்கோவில் எம் மாம்பூண்டி நம்பியூர் நிச்சாம்பாளையம் சாந்திபாளையம் கோஷணம் சின்னாரிபாளையம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களிடம் இருந்து இலவச வீட்டுமனைப்பட்டா முதியோர் உதவித்தொகை பட்டா மாறுதல் உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய 108 மனுக்களை பெற்றுக்கொண்டு அனைத்து மனுக்களையும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இன்று அனைத்து வட்டங்களிலும் நடைபெற்ற வருவாய் தீர்வாயம் நிகழ்ச்சியில் 899 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. மேலும் நாளை (23.05.2025) நம்பியூர் வட்டம் ஏலத்தூர் உள்வட்டத்திற்குட்பட்ட ஏலத்தூர் சுண்டக்காம்பாளையம் கூடக்கரை கரட்டுப்பாளையம் குருமந்தூர் கடத்தூர் ஆண்டிபாளையம் ஆகிய கிராமங்களுக்கான வருவாய் தீர்வாயம் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஜமாபந்தி தீர்வாயத்தில் நம்பியூர் உள்வட்டத்திற்குட்பட்ட கிராமங்களுக்கான வருவாய் பதிவேடுகள் பட்டா சிட்டா பதிவேடு வரிவசூல் பதிவேடு நில அளவை பதிவேடு வருவாய் வரைபட பதிவேடு ஏ-பதிவேடு சிறப்பு பதிவேடு நத்தம் அடங்கல் பதிவேடு கிராம கணக்குகள் ஆகியவற்றை கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் முஹம்மது குதுரத்துல்லா (பொது) சி.லோகநாதன் (வேளாண்மை) நம்பியூர் வருவாய் வட்டாட்சியர் கேசவமூர்த்தி உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பைக்காரா படகு இல்லத்தில் ஸ்கூட்டர் படகில் சவாரி செய்ய ஆர்வம் காட்டும் சுற்றுலா பயணிகள்



ஊட்டி மே.23-

பைக்காரா படகு இல்லத்தில் உள்ள ஸ்கூட்டர் படகில் சவாரி செய்ய சுற்றுலா பயணிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் இருந்து மைசூர் செல்லும் சாலையில் சுமார் 22 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள பைக்hரா படகு இல்லம். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் இங்கு கடந்த சில மாதங்களாக பெய்த தொடர் மழையால் அணையின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து உள்ளது.

தற்போது படிக்கட்டுகள் வரை தண்ணீர் இருப்பதோடு நீல நிறத்தில் கடல் போல காட்சி அளிக்கிறது. இங்கு சிறிய மலைக் குன்றுகள் தீவு போல காணப்படும் அணை பகுதி அடர்ந்து வளர்ந்த மரங்களை கொண்ட இயற்கை எழில் கொஞ்சும் வனப்பகுதி வழியாக படகு சவாரி செய்வது சுற்றுலா பயணிகளை எல்லையில்லா மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. சில சமயங்களில் தண்ணீர் அருந்த வரும் வனவிலங்குகளை பார்க்கும் வாய்ப்பும் கிடைக்கிறது. இதனால் விடுமுறை நாட்களில் இங்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

இந்த நிலையில் தற்போது கோடை சீசன் என்பதாலும் சமவெளிப்பகுதியில் நிலவும் வெப்பத்தில் இருந்து தங்களை பாதுகாத்தக்கொள்ளும் வகையில் நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா பயணிகள் குவிந்து வருகின்றனர். ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் நடைபெறும் மலர் கண்காட்சிக்கு சென்ற பிறகு அங்கிருந்து பைக்காரா படகு இல்லத்திற்கு அதிகளவில் செல்கின்றனர்.

இங்கு சவாரி செய்வதற்காக 3 பேர் செல்லும் வேக படகு 7 8 இருக்கைகள் மற்றும் 10 இருக்கைகள் கொண்ட மோட்டார் படகுகள் அதிவேக படகுகள் ஸ்கூட்டர் படகுகள் என மொத்தம் 32 படகுகள் இயக்கப்படுகின்றன. இதில் சுற்றுலா பயணிகள் குடும்பத்தினருடன் ஆனந்தமாக சவாரி செய்தனர். பளிச்சென்று கண்ணாடி போல் தூய்மையாக காட்சியளிக்கும் தண்ணீரை கிழித்துக் கொண்டு சீறியபடி செல்லும் அதிவேக படகில் சவாரி செய்து சுற்றுலா பயணிகள் குதூகலம் அடைகின்றனர். மேலும் ஓட்டுநருடன் 2 பேர் மட்டுமே செல்லும்வகையில் உள்ள ஸ்கூட்டர் படகில் செல்வதற்கு சுற்றுலா பயணிக்ள அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இதற்கிடையே கடந்த ஒரு வாரமாக பெய்து வந்த மழை குறைந்து பகலில் நன்றாக வெயில் அடிப்பதால் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து காணப்படுகிறது. சில சமயங்களில் சாலைகளில் ஆங்காங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு சாலைகளில் நீண்ட தூரம் வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன. மேலும் படகு இல்லத்தில் சுற்றுலா பயணிகளும் நீண்ட வரிசையில் காத்திருந்து சவாரி செய்து மகிழ்ந்து செல்கின்றனர்.

## நாமக்கல் மாவட்டம்

# ராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் ரூ.5.63 கோடி மதிப்பீட்டில் 21 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 4 முடிவுற்ற திட்டப்பணிகள்

## அமைச்சர் மா.மதிவேந்தன் திறந்து வைத்தார்



**நாமக்கல்,மே.23-**

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சட்டமன்ற தொகுதி, இராசிபுரம், நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் (22.05.2025) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ரூ.4.68 கோடி மதிப்பீட்டில் 21 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டில் 4 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தார்.

இராசிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் சிங்களாந்தபுரம், கனகபொம்மன்பட்டி, போடிநாயக்கன்பட்டி, காக்காவேரி, பட்டணம் முனிப்பம்பாளையம், சந்திரசேகரபுரம், முருங்கப்பட்டி, கூனவேலம்பட்டி, பொன்குறிச்சி உள்ளிட்ட ஊராட்சிகளில் ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் 11 சிமெண்ட் கான்கிரிட் சாலைகள் மற்றும் 4 ஓரடுக்கு கப்பி சாலைகள் அமைக்கும் பணி, அரசபாளையம் மற்றும் பொன்குறிச்சி ஊராட்சிகளில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2.27 கோடி மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து, வடுகம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.17.85 இலட்சம் மதிப்பீட்டில் விவசாய தானிய விளைபொருள் சேமிப்புக்கூடம், காக்காவேரி ஊராட்சி, புதிய காலனி பகுதியில் ரூ.16.55 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையத்தை திறந்து வைத்து, குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கினார். மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் மோளப்பாளையம் ஊராட்சியில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீடு மற்றும் கனகபொம்மன்பட்டி ஊராட்சி, சின்னப்பநாயக்கன்பட்டியில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலக கட்டங்கள் என மொத்தம் இராசிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் 19 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.95.00 இலட்சம் 4 முடிவுற்ற திட்டப்பணிகளை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, நாமகிரிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மூலப்பள்ளிபட்டி மற்றும் பெரப்பன்சோலையில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சிகளில் அட்மா குழுத்தலைவர்கள் கே.பி.ஜெகநாதன் (இராசிபுரம்), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.இராமசுவாமி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.வடிவேல், ஆகியோர் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சேலம் மாவட்டம் ஏற்காடு கோடை விழாவினை இன்று அமைச்சர்கள் தொடங்கி வைக்கிறார்கள்

## கலெக்டர் இரா.பிருந்தாதேவி தகவல்

**சேலம்,மே.23-**

வேளாண்மை- உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் , வனம் மற்றும் கதர்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் இன்று 23.05.2025 மாலை 4 மணியளவில் 48-வது கோடை விழா மற்றும் மலர்க்காட்சியினை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளார்கள். இதுகுறித்து கலெக்டர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் 48-வது கோடை விழா மற்றும் மலர்க்காட்சி வரும் நாளை 23.05.2025 வெள்ளிக்கிழமை அன்று தொடங்கி 29.05.2025 வியாழக்கிழமை வரை 7 நாட்கள் நடைபெறவுள்ளது.

48-வது கோடை விழா மற்றும் மலர்க்காட்சியினை வேளாண்மை- உழவர் நலத்துறை அமைச்சர் , வனம் மற்றும் கதர்துறை அமைச்சர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோர் நாளை மாலை 4 மணியளவில் தொடங்கி வைத்து, வேளாண்மைத்துறை, வனத்துறை, சுற்றுலாத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பட்டு வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து, பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளார்கள். இவ்விழாவில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த ஆண்டு நடைபெறும் ஏற்காடு கோடை விழா சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில், தோட்டக்கலைத் துறையின் சார்பில் அண்ணா பூங்காவில் 1.50 இலட்சம் மலர்களைக் கொண்டு மலர்க்காட்சி, பழக் கண்காட்சி மற்றும் காய்கறிக் கண்காட்சிகளும் அமைக்கப்படவுள்ளது. குறிப்பாக, வன விலங்குகளைப் பாதுகாத்து வனத்தை பாதுகாப்போம் என்ற உணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் வன விலங்குகளின் வடிவமைப்புகள், மேட்டூர் அணை உள்ளிட்ட பல்வேறு வடிவமைப்புகள் வண்ண மலர்களைக் கொண்டு அமைக்கப்படுகின்றது.

மேலும், சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் வகையில் 25,000-க்கும் மேற்பட்ட வண்ணமலர் தொட்டிகளைக் கொண்டு மலர்க்காட்சி அமைக்கப்படவுள்ளன. இவ்விழாவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் ஆரோக்கிய குழந்தைகள் போட்டி, பாரம்பரிய உணவுப் போட்டி, மகளிர் திட்டத்தின் சார்பில் கோலப்போட்டி, சுற்றுலாத் துறையின் சார்பில் சுற்றுலா பயணிகளுக்கான படகு போட்டிகள் நடத்தப்படவுள்ளது. மேலும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் செல்லப் பிராணிகள் (நாய்கள்) கண்காட்சி, கலைப்பண்பாட்டுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை ஒருங்கிணைந்து பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது.

அதேபோன்று இளைஞர்களுக்கான கால்பந்து, கிரிக்கெட் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. குறிப்பாக ஏற்காட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் கோடை விழா நடைபெறும் அனைத்து நாள்களிலும் இன்னிசை நிகழ்ச்சிகள் மற்றும் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது. இவ்வாறு கலெக்டர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, தெரிவித்துள்ளார்.

# ஓசூரில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் சட்டமன்ற பேரவை மதிப்பீட்டு குழுவினர் ஆய்வு

**ஓசூர்,மே.23-**

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மதிப்பீட்டு குழு தலைவர் எஸ்.காந்திராஜன் தலைமையிலான மதிப்பீட்டு குழுவினர் நேற்று ஓசூர் பன்னாட்டு மலர் ஏற்றுமதி மையத்தில் ஆய்வு செய்து அங்கு குளிர் பதனக்கிடங்கில் வைத்து பராமரிக்கப்பட்டும் பூக்களை ஆய்வு செய்தும், பன்னாட்டு மலர் ஏற்றுமதி மையத்தின் செயல்பாடுகளை துறை சார்ந்த அலுவலர்களிடம் கேட்டு அறிந்து விவசாயிகளிடம் கலந்துரையாடினார்கள். பின்னர் விவசாயிகளுக்கு ரூ.10 லட்சம் மதிப்பில் துவரை விதைகள் ,ராகி விதைகள், விதைத்தெளிப்பான்களை வழங்கினார்கள். இதனை தொடர்ந்து ஓசூரில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் 11.53 ஏக்கர் பரப்பளவில் நடைப்பெற்று வரும் பணிகள் மற்றும் ஓசூர் மாவட்ட வன அலுவலகத்தில் ஆய்வு செய்தனர். மேலும் மத்திகிரியில் உள்ள கால்நடைப்பண்ணையில் ஆய்வு செய்து, கால்நடை வளர்ப்பு, இனப்பெருக்கத்திற்கான பணிகள், பால் உற்பத்தி, கால்நடைகளுக்கு வழங்கும் தீவனங்கள் குறித்தும் கல்நடைத்துறை அலுவலர்களுடன் கலந்துரையாடினார்கள். இந்த ஆய்வின்போது, கலெக்டர் ச. தினேஷ்குமார், மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் எம்எல்ஏக்கள், தா. உதயசூரியன், சேவூர் எஸ். ராமச்சந்திரன், எஸ். பி .வெங்கடேசன், எஸ். எஸ். பாலாஜி, ஓசூர் எம்எல்ஏ பிரகாஷ், சட்டமன்றப் பேரவை அரசு முதன்மைச் செயலாளர் கி. சீனிவாசன், கூடுதல் செயலாளர் சுப்பிரமணியம், துணை செயலாளர் பாலகிருஷ்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் சாதனை குரல், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, உதவி கலெக்டர் பிரியங்காஓசூர் மாநகர மேயர் சத்யா மற்றும் மாநகரத் துணை மேயர் ஆனந்த் அய்யா மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அட்மா திட்டத்தில் பயறுவகை மற்றும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி

**கிருஷ்ணகிரி,மே.23-**

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களின் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் (அட்மா) கீழ் சின்னகுப்மனபட்பள்ளி கிராமத்தில் கோடை காலத்திற்கேற்ப பயறுவகை மற்றும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து பயறிசி வழங்கப்பட்டது. இந்த பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி தொடங்கி வைத்து கோடை காலத்திற்கேற்ப பயறுவகை மற்றும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விளக்கம் அளித்தார்.

இந்த பயிற்சியின் போது, அத்திமுகம், அதியமான் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், உதவி பேராசிரியர் (மண்ணியியல்) பரத்குமார் பங்கேற்று உயர் விளைச்சல் ரகங்கள் மற்றும் பயறுவகை மற்றும் எண்ணெய் வித்துக்கள் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, விதை நேர்த்தியின் பயன்கள், நுண்ணூட்ட உர மேலாண்மை, பல்ஸ் ஒன்டர் பயன்கள், ஜிப்சம் இடுவதால் ஏற்படும் நன்மைகள், நிலக்கடலையில் வரப்பு பயிராக துவரை பயிரிடுதல், அசோலா பயன்கள், மண்புழு உரம் தயாரித்தல், பஞ்சகாவ்யா தயாரித்தல், பூச்சி விரட்டி, மீன் அமிலம், ஜீவாமிர்தம், அமிர்த கரைசல், கன ஜீவாமிர்தம், பசுந்தாள் உரம் தயாரித்தல் குறித்து பற்றி எடுத்து கூறினார். வேப்பனப்பள்ளி, துணை வேளாண்மை அலுவலர் ராமநாதன் பங்கேற்று வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் வழங்கப்படும் இடுப்பொருட்கள், பிரதான் மந்திரியின் கவுரவ நிதி திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வு குறித்து விளக்கம் அளித்தார். மண் மாதிரி எடுக்கும் முறை மற்றும் அவற்றின் பயன்கள், உர பரிந்துரை குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இந்த பயிற்சியில் விவசாயிகள் பலர் கலந்துக் கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டம், ஏணுசோனை கிராமத்தில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி

## ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்



**கிருஷ்ணகிரி,மே.23-**

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அனைத்து துறைகள் சார்பில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியது குறித்து புகைப்படங்கள் மூலம் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் புகைப்படக் கண்காட்சி கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், ஏணுசோனை கிராமத்தில் 21.05.2025 அன்று அமைக்கப்பட்டது. இப்புகைப்படக் கண்காட்சியில், தமிழ்நாடு அரசு செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு சிறப்பு திட்டங்களான, மக்களைத் தேடி மருத்துவம், விடியல் பயணம், இன்னுயிர் காப்போம் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, புதுமைப்பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம், மற்றும் இளைஞர்;களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம், விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்குதல், விவசாயிகளுக்கு 1.50 இலட்சம் மின் இணைப்பு வழங்கும் திட்டம், நான் முதல்வன் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பள்ளி மாணவர்களுக்கு வானவில் திட்டம், மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குதல்,

மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு தொழில் சார் கடனுதவிகள் வழங்குதல், மீண்டும் மஞ்சப்பை, சர்வதேச மலர் ஏல மையம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம், மக்களுடன் முதல்வர், உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு, உங்களைத் தேடி உங்கள் ஊரில், தமிழ்ப் புதல்வன் உள்ளிட்ட திட்டங்களின் நிகழ்ச்சிகள் குறித்த புகைப்படங்களும், மேலும், அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் மற்றும் கலெக்டர் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டது. இப்புகைப்படக்கண்காட்சியை 300-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# நான் முதல்வன் - கல்லூரிக் கனவு திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி

## கலெக்டர் ரெ.சதீஸ் தலைமையில் நடைபெற்றது






**தருமபுரி,மே.23-**

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், என்.என்.மஹாலில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நான் முதல்வன் - கல்லூரிக் கனவு திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான உயர் கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி கலெக்டர் ரெ.சதீஸ், தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நான்முதல்வன் - உயர்வுக்கு படி என்ற மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல் கையேட்டினை கலெக்டர் ரெ.சதீஸ், வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு மாணவர்கள், மாணவியர்களுக்கு சிறப்பான உயர்கல்வி கிடைத்திட வேண்டும் என்பதற்காக எண்ணற்ற பல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் மாணவர்கள், மாணவியர்களின் எதிர்காலத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டு அனைத்து துறையிலும் முதல்வனாக நம் மாணவர்கள், மாணவியர்கள் திகழ வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு, மாணவர்கள், மாணவியர்களுக்கு உயர்கல்வியில் நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் நான் முதல்வன் - கல்லூரி கனவு திட்டத்தினை அறிவித்தார்கள்.

நான் முதல்வன் - கல்லூரிக் கனவு திட்டத்தின் கீழ் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி முதல்கட்டமாக அதியமான் கோட்டை, செந்தில் பப்ளிக் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இன்றைய தினம் நான் முதல்வன் - கல்லூரிக் கனவு திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி அரூரில் நடைபெற்று வருகிறது.

முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் உறக்கத்தில் வருவது கனவல்ல, உன்னை உறங்கவிடாமல் செய்வது தான் கனவு என குறிப்பிடுவார். இளையோரின் அவ்வாறான கனவை மெய்ப்படுத்தும் விதமாகவும், ஆற்றுப்படுத்தும் விதமாகவும் பள்ளி மாணவ, மாணவியருக்கு தேவையான அனைத்து உதவிகளையும், சலுகைகளையும் தமிழ்நாடு அரசு கொடுத்து வருகிறது. இளைய சமுதாயத்தை நல்ல முறையில் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது தான் கல்லூரிக் கனவு திட்டம். பெற்றோர் தங்கள் குழந்தைகளை பள்ளியில் சேர்த்தால் போதும். பள்ளிக் கல்வியை வெற்றிகரமாக முடித்து கல்லூரிக் கல்வியை தொடரும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் தரப்பட்டுள்ளது.

மாணவியருக்கு புதுமைப்பெண் திட்டம், மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் திட்டம் என பல திட்டங்கள் பயன்பாட்டில் உள்ளன. இதுதவிர, கல்லூரி படிப்பை முடித்த பிறகும் பயன்படுத்திக் கொள்ள திறன் மேம்பாடு உட்பட எண்ணற்ற திட்டங்கள் உள்ளன. ஒரு மாணவருக்கு எது போன்ற துறையில் ஆர்வமும்,

முனைப்பும் இருக்கிறது என்பதை கண்டறிந்து அதற்கேற்ற வேலைவாய்ப்பு அமையும் வகையில் தமிழக அரசு பயிற்சிகளை அளிக்கிறது. இதுதொடர்பான விவரங்களை

பள்ளிக் கல்வித் துறை, வேலை வாய்ப்புத் துறை மற்றும் இணைய தளம் ஆகியவற்றில் காண முடியும். இது போன்ற திட்டங்களை அறிந்து கொண்டு தங்களுக்கு பொருத்தமானதை தேர்வு செய்து பயன்பெற வேண்டும்.

பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கல்வியை தொடர முடியாமல் இடைநிற்றல் ஏற்படும் சூழல் உருவானாலும், அதையெல்லாம் தீர்த்து மாணவர்கள் தடங்கலின்றி படிப்பை தொடர வேண்டும் என்பதற்காகவும், சாதனை மாணவர்களை உருவாக்க வேண்டும் என்பதற்காகவும் தான் கல்லூரிக் கனவு திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவ, மாணவியர் மட்டுமன்றி பெற்றோரும் இதையெல்லாம் அறிந்து குழந்தைகளின் படிப்பு தொடர்ந்திட இத்திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இடைநிற்றலுக்கு வாய்ப்பு தந்துவிடக் கூடாது.

மாணவ, மாணவியர்கள் பட்டப்படிப்பை மேற்கொண்டு வாழ்க்கையின் தரத்தை மேம்படுத்திக் கொள்ள இந்த கல்லூரிக் கனவு திட்டம் பயனளிப்பதாக இருக்கும். இத்தகைய திட்டத்தை மாணவ, மாணவியர் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் ரெ.சதீஸ், தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஐ.ஜோதிசந்திரா, கல்லூரி கல்வி இயக்கக மண்டல இணை இயக்குநர் சிந்தியா செல்வி, இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.சாந்தி, மாவட்ட சமூக நல அலுவலர் பவித்ரா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் எம். செல்வம் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# போலி ஆவணங்கள் மூலம் ரியல் எஸ்டேட் அதிபரிடம் ரூ.1.50 கோடி மோசடி

## கணவன் மனைவி உட்பட 4 பேர் மீது வழக்கு

**தர்மபுரி,மே.23**

தர்மபுரி அடுத்த பழைய தர்மபுரியை சேர்ந்தவர் வேலன். ரியல் எஸ்டேட் அதிபராண இவர் வியாபாரம் வேலையாக கிருஷ்ணகிரிக்கு சென்ற போது, அப்பகுதியை சேர்ந்த தொழிலதிபர் ராகவேந்திரகுப்தாவுடன் கடந்த 2020 ம் ஆண்டு முதல் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ராகவேந்திகுப்தா தொழில் முதலீடாக தனது குடும்பத்தினரின் பெயரில் உள்ள வீடு, குவாரி உள்ளிட்டவற்றை அடமானம் வைத்து வேலனிடம் ரூ.1.50 கோடி கடன் பெற்றுள்ளார்.

வேலன் கடன் தொகையை திரும்ப கேட்ட போது எல்லாம் ராகவேந்திரகுப்தா மற்றும் அவரது மனைவி வைஸ்ணவி, தந்தை பத்ரிநாத், தாயார் உமாராணி ஆகியோர் கடன் தொகையை தாங்கள் திருப்பி கொடுப்பதாகவும் அதற்கான உத்திரவாதம் கொடுத்துள்ளனர். இந்த நிலையில் ராகவேந்திரகுப்தாவிடம் ரியல் எஸ்டேட் அதிபர் வேலன் பணம் கேட்ட போது பணத்தை தர காலம் தாழ்த்தி வந்துள்ளார்.இதனால் சந்தேகம் அடைந்த வேலன் ராகவேந்திரகுப்தா மற்றும் அவரது குடும்பத்தினர் கொடுத்த கடன் உத்திரவாத பத்திரங்கள் குறித்து விசாரித்த போது தங்களது வீடு, குவாரியை பலரிடம் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளது தெரியவந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதையடுத்து வேலன் இதுகுறித்து கோவை மேற்கு மண்டல ஐ.ஜி.யிடம் புகார் கொடுத்தார். அதன் பேரில் தர்மபுரி மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் ராகவேந்திர குப்தா, அவரது மனைவி வைஸ்ணவி, தந்தை பத்திரிநாத், தாய் உமாராணி ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர். தொடர்ந்து இது வழக்கு தொடர்பாக அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.


## தென்காசி மாவட்டம்
## சிவகிரி தேர்வுநிலை பேரூராட்சி

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**இணையதளம் வாயிலாக மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகளில்) சமர்ப்பிக்கப்பட வேண்டும்**

**ந.க.எண்.29/2024** **நாள்: 21.05.2025**

சிவகிரி தேர்வுநிலை பேரூராட்சியில் அடிப்படை கட்டமைப்பு 2024–25 இன் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சிவகிரி பேரூராட்சி பகுதியில் பாலங்கள் அமைத்தல் பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1. முன்வைப்புத் தொகை ரூ.2,00,000/- இணையதளம் வாயிலாக மட்டும். (Online Only)
2. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
3. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்:
   அ) முன் கலந்தாய்வு கூட்டம் : 29.05.2025 காலை 11.00 மணி
   ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 09.06.2025 மாலை 3.00 மணி வரை
   இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் : 09.06.2025 மாலை 3.30 மணி வரை
4. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.
5. ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

செயல் அலுவலர்
சிவகிரி தேர்வுநிலை பேரூராட்சி

செ.ம.தொ.இ / 2489 / ஒப்பந்தப்புள்ளி / 2025



## இடமாற்றம் அறிவிப்பு

**ஆசிர்வாத் மைக்ரோ பைனான்ஸ் லிமிடெட்**
**Subsidiary of Manapuram Finance Limited**
**1516. அரூர் கிளை**

மேலே குறிப்பிட்டுள்ள 1516 அரூர் கிளை வாடிக்கையாளர்களின் வசதிக்காக 01.05.2025 முதல் புதிய முகவரியில் செயல்பட்டு வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**Address : D.No.2/461, AV Complex,**
**மோப்பிரிபட்டி புதூர், அரூர் (TK), தர்மபுரி (DT) - 636902**

தொடர்புக்கு :
**BM No. 9551650964 / AM No. 7299034211 / RM No. 7845676474**



உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
பி.இ.சிய. எண். 35 / 2025 / டி
சித்தாயி, W/O. சின்னப்பையன்,
க.எண். 36, பூசாரிக்காடு கிழக்கு,
கோனேரிப்பட்டி,
இடங்கணசாலை கிராமம்,
சங்ககிரி (TK), சேலம் மாவட்டம்.
........ மனுதாரர்
/ எதிராக /
ஆணையாளர் அவர்கள்,
இடங்கணசாலை நகராட்சி, சேலம் மாவட்டம்.
...... எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை பெரியண்ண கவுண்டர் என்பவர் கடந்த 21 – 01 – 1980 அன்று தனது வீட்டில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேன்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் –கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

/ நீதிமன்ற உத்தரவு படி /

M. TAMILARASAN. M.A., B.L.,
ADVOCATE, SANKARI.



மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் நீதிமன்றம், மேட்டூர்.
சி.ப.எண்.312/2025/A5

தங்கவேல் (வயது 67)
த/பெ.மெய்யக்கவுண்டர்,
1-9, குப்பகவுண்டன்வளவு,
இராமிரெட்டிப்பட்டி, ஓமலூர் தாலுக்கா,
சேலம் - 636 501.
...மனுதாரர்
/ Vs /
1. திரு. சார்பதிவாளர் அவர்கள்,
தாரமங்கலம், சேலம் மாவட்டம்.
2.திரு.பிறப்பு/இறப்பு அலுவலர் அவர்கள்,
சேலம் மாவட்டம்.
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தாயார் மினிச்சியம்மாள் க/பெ. மெய்யக்கவுண்டர் என்பவர் கடந்த 24.09.2000 ம் தேதியன்று சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், இராமிரெட்டிப்பட்டி, குப்பகவுண்டன்வளவு, க.எண்.1 - 9 என்ற முகவரியில் வயதுமூப்பு காரணமாகவும் உடல்நலகுறைவால் வீட்டில் இறந்ததை அறியாமை காரணமாக இறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது இறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 15 தினங்களுக்குள்ளாக மேட்டூர் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

/நீதிமன்ற உத்தரவுப்படி/

J.PATTESWARAN, B.B.A.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்.



Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A2, Meyyanur Road, Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



## ஒடுகத்தூர் முதல்நிலை பேரூராட்சி
**வேலூர் மாவட்டம்**

**ந.க.எண்.128/2025** **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** **நாள்.13.05.2025**

வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் முதல்நிலை பேரூராட்சியில் மாநில நிதி ஆணைய நகர்புற சாலை மேம்பாட்டு நிதி (SFC (UDRF) 2025–2026 திட்டத்தின் கீழ் ரூ.105.00 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 29.05.2025 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ–டெண்டரிங் முறையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்தாரர்களின் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும்

ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் 29.05.2025 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை https://tntenders.gov.in, http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணைய தளம் மூலம் E-Token / Digital Signature card உபயோகித்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
ஒடுகத்தூர் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம்

செமதொஇ/2506/ஒப்பந்தப்புள்ளி/2025

## எதிரணியை அதிக முறை ஆல் அவுட் செய்து
# மும்பை அணி புதிய சாதனை



**மும்பை, மே 23-**

ஐ.பி.எல். வரலாற்றில் யாரும் தொட முடியாத சாதனையை மும்பை இந்தியன்ஸ் அணி படைத்துள்ளது.

**181 ரன்கள் குவிப்பு...**

ஐ.பி.எல். தொடரின் 63-வது லீக் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மும்பை இந்தியன்ஸ், டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த போட்டியில் டாஸ் வென்ற டெல்லி கேப்பிட்டல்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட் செய்த மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 180 ரன்கள் குவித்தது. இதையடுத்து, 181 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி அணி களமிறங்கியது.


**பிளே ஆப் சுற்றுக்கு...**

மும்பை அணியின் துல்லியமான பந்து வீச்சால் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி 18.2 ஓவரில் 121 ரன்கள் மட்டுமே எடுத்து ஆல் அவுட்டானது. இதன்மூலம் 59 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் வெற்றி பெற்றதுடன், பிளே ஆப் சுற்றுக்கும் முன்னேறியது.

**தொட முடியாத சாதனை...**

இந்த போட்டியில் எதிரணியை ஆல் அவுட் செய்ததன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் யாரும் தொட முடியாத சாதனையை மும்பை இந்தியன்ஸ் அணி படைத்துள்ளது. அதன்படி எதிரணியை 40 முறை ஆல் அவுட் செய்து மும்பை இந்தியன்ஸ் முதல் இடத்தில் உள்ளது. 2-வது இடத்தில் ஆர்.சி.பி. அணி (26 முறை) உள்ளது. 3 முதல் 5 இடங்கள் முறையே கொல்கத்தா (25), சென்னை (24), பஞ்சாப் (19) ஆகிய அணிகள் உள்ளனர். அடுத்த 5 இடங்கள் முறையே ஐதராபாத் (19 முறை), டெல்லி (18), ராஜஸ்தான் (17), குஜராத் (5), லக்னோ (4) ஆகிய அணிகள் உள்ளனர். மும்பை இந்தியன்ஸ் அணியின் இந்த சாதனையை முறியடிப்பது மிகவும் கஷ்டமான ஒன்றாக பார்க்கப்படுகிறது.

## 7 ஐ.பி.எல். தொடரில் 500 ரன்கள்:
# கே.எல்.ராகுல் புதிய சாதனை



**மும்பை, மே 23-**

ஐ.பி.எல். வரலாற்றில் 7 முறை ஒரு தொடரில் 500 ரன்களுக்கு மேல் குவித்த 3 ஆவது வீரர் என்ற சாதனையை படைத்தார்.

**63-வது லீக் போட்டி...**

ஐ.பி.எல். தொடரின் 63-வது லீக் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. இதில் மும்பை இந்தியன்ஸ், டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டாஸ் வென்ற டெல்லி கேப்பிட்டல்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட் செய்த மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 180 ரன்கள் குவித்தது.


**முன்னேற்றம்...**

இதையடுத்து, 181 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி அணி 18.2 ஓவரில் 121 ரன்கள் மட்டுமே எடுத்து ஆல் அவுட்டானது. இதன்மூலம் 59 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் வெற்றி பெற்றதுடன், பிளே ஆப் சுற்றுக்கும் முன்னேறியது. டெல்லி அணி 6-வது தோல்வியை பெற்றதுடன், நடப்பு ஐ.பி.எல். தொடரில் இருந்து வெளியேறியது.

**விராட் கோலி முதலிடம்...**

இப்போட்டியில் கே.எல். ராகுல் 11 ரன்கள் அடித்து ஆட்டமிழந்தார். இதன்மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் 7 முறை ஒரு தொடரில் 500 ரன்களுக்கு மேல் குவித்த 3 ஆவது வீரர் என்ற சாதனையை படைத்தார். நடப்பு ஐ.பி.எல். தொடரில் கே.எல். ராகுல் இதுவரை 504 ரன்கள் அடித்துள்ளார். 8 முறை ஐ.பி.எல். தொடரில் 500 ரன்களுக்கு மேல் குவித்து இப்பட்டியலில் விராட் கோலி முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து சுற்றுப்பயணம்:
# ஆயுஷ் மாத்ரே தலைமையிலான இந்திய யு-19 அணி அறிவிப்பு



**மும்பை, மே 23-**

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் ஆயுஷ் மாத்ரே தலைமையிலான இந்திய யு-19 அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுப்பயணம்...**

இந்திய யு-19 (19-வயதுக் குட்பட்டோர்) கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் இரண்டு 4 நாட்கள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாட உள்ளது. அதற்கு முன்னதாக ஒரு பயிற்சி போட்டியிலும் விளையாட உள்ளது. இந்த தொடர் வரும் ஜூன் 24-ம் தேதி முதல் ஜூலை 23-ம் தேதி வரை நடைபெற உள்ளது.

**ஆயுஷ் மாத்ரே கேப்டன்...**

இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். தொடரில் சென்னை அணிக்காக விளையாடிய ஆயுஷ் மாத்ரே கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் ஐ.பி.எல். தொடரில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய வைபவ் சூர்யவன்ஷிக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

**இந்திய அணி விவரம்...**

ஆயுஷ் மத்ரே (கேப்டன்), வைபவ் சூர்யவன்ஷி, விஹான் மல்ஹோத்ரா, மவுல்யராஜ்சிங் சாவ்தா, ராகுல் குமார், அபிக்யான் குண்டு (துணை கேப்டன்), ஹர்வன்ஷ் சிங், ஆர்.எஸ். அம்ப்ரிஷ், கனிஷ்க் சவுஹான், கிலன் படேல், ஹெனில் படேல், யுதாஜித் குஹா, பிரணவ் ராகவேந்திரா, முகமது எனான், ஆதித்யா ராணா, அன்மோல்ஜீத் சிங்.

## டெல்லியை வீழ்த்தி கடைசி அணியாக
# பிளே ஆப் சுற்றில் நுழைந்தது மும்பை

**மும்பை, மே 23-**

ஐ.பி.எல். போட்டியின் 63-ஆவது ஆட்டத்தில் மும்பை இண்டியன்ஸ் 59 ரன்கள் வித்தியாசத்தில் டெல்லி கேப்பிடல்ஸை வீழ்த்தியது. இந்த வெற்றியின் மூலமாக மும்பை, கடைசி அணியாக பிளே ஆபில் நுழைந்தது. டெல்லி வெளியேறியது.

**சூர்யகுமார் கலக்கல்...**

ஐ.பி.எல். போட்டியின் 63-ஆவது ஆட்டத்தில் மும்பை இண்டியன்ஸ் அணி, டெல்லி கேப்பிட்டல்சை எதிர்கொண்டது. முன்னதாக டாஸ் வென்ற டெல்லி, ஃபீல்டிங்கை தேர்வு செய்தது. மும்பை இன்னிங்ஸில் ரோஹித் சர்மா 5, வில் ஜாக்ஸ் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 21 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினர். 4-ஆவது பேட்டராக சூர்யகுமார் களம் புகுந்து விளாச, தொடக்க வீரர் ரயான் ரிக்கெல்டன் 2 சிக்ஸர்களுடன் 25 ரன்களுக்கு முடித்துக் கொண்டார். அடுத்து திலக் வர்மா பேட் செய்ய வர, அவருடனான சூர்யகுமாரின் 4-ஆவது விக்கெட் பார்ட்னர்ஷிப்புக்கு 55 ரன்கள் கிடைத்தது.

**180 ரன்கள் குவிப்பு...**

திலக் வர்மா 1 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 27 ரன்களுக்கு பெவிலியன் திரும்ப, 6-ஆவதாக வந்த கேப்டன் ஹர்திக் பாண்டியா, 3 ரன்களுக்கு விக்கெட்டை இழந்தார். கடைசியில் நமன் திர் சற்று அதிரடி காட்டினார். ஓவர்கள் முடிவில் சூர்யகுமார் 43 பந்துகளில் 7 பவுண்டரிகள், 4 சிக்ஸர்களுடன் 73, நமன் திர் 8 பந்துகளில் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 24 ரன்கள் விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தனர். டெல்லி பௌலிங்கில் முகேஷ் குமார் 2, துஷ்மந்தா சமீரா, முஸ்டாஃபிஸுர் ரஹ்மான், குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தினர். இந்த ஆட்டத்தில் மும்பை 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 180 ரன்கள் சேர்த்தது.

பின்னர் 181 ரன்களை நோக்கி விளையாடிய டெல்லி அணியில் சமீர் ரிஸ்வி 6 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 39 ரன்கள் சேர்த்ததே அதிகபட்சமாக இருக்க, விப்ராஜ் நிகம் 3 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 20, ஆசுதோஷ் சர்மா 1 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 18 ரன்கள் எடுத்தனர். கே.எல்.ராகுல் 2 பவுண்டரிகளுடன் 11 ரன்களுக்கு அவுட்டானார், கேப்டன் பாப் டு பிளெஸ்ஸிஸ் 6, அபிஷேக் பொரெல் 6, டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 2, மாதவ் திவாரி 3, குல்தீப் யாதவ் 7, முஸ்டாஃபிஸுர் ரஹ்மான் 0 ரன்களுக்கு சாய்க்கப்பட்டனர். மும்பை பவுலிங்கில் மிட்செல் சேன்ட்னர், ஜஸ்பிரீத் பும்ரா ஆகியோர் தலா 3, டிரென்ட் போல்ட், தீபக் சஹர், வில் ஜாக்ஸ், கரன் சர்மா ஆகியோர் தலா 1 விக்கெட் கைப்பற்றினர். இந்த வெற்றியின் மூலமாக மும்பை, கடைசி அணியாக பிளே ஆபில் நுழைந்தது. டெல்லி வெளியேறியது.

# காலிறுதிக்கு ஸ்ரீகாந்த் தகுதி

மலேசியா மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டி கோலாலம்பூரில் நடந்து வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த 2-ம் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் நம்பர் ஒன் வீரரான இந்தியாவின் ஸ்ரீகாந்த் - அயர்லாந்தின் நுயென் உடன் மோதினர். இந்த ஆட்டத்தில் ஸ்ரீகாந்த் 23-21, 21-17 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று கால் இறுதிக்கு தகுதி பெற்றார். அவர் கால்இறுதியில் பிரான்சின் டி.போ போவ்வுடன் மோதுகிறார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி-பிரான்சின் டி. போபோவ் மோதினர். இதில் ஆயுஷ் ஷெட்டி 13-21,17-21 என்ற செட் கணக்கில் தோற்றார். மற்றொரு இந்திய வீரரான சதீஷ் கருணாகரன் 14-21, 16-21 என்ற செட் கணக்கில் பிரான்ஸ் வீரர் சி.போ போவ்விடம் தோற்று வெளியேறினார்.

# வெஸ்ட் இண்டீசுக்கு அதிர்ச்சி

வெஸ்ட் இண்டீஸ் - அயர்லாந்து இடையிலான முதல் ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் முதலில் பேட்டிங் செய்த அயர்லாந்து அணி பால்பிர்னியின் அபார சதத்தின் உதவியுடன் 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 303 ரன்கள் குவித்தது. பின்னர் 304 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணியால் அயர்லாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியவில்லை. வெறும் 34.1 ஓவர்களில் 179 ரன்களில் ஆல் அவுட் ஆனது.

இதன் மூலம் அயர்லாந்து 124 ரன்கள் வித்தியாசத்தில் வெஸ்ட் இண்டீசுக்கு அதிர்ச்சி அளித்ததுடன் தொடரிலும் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் ரோஸ்டன் சேஸ் 55 ரன்கள் அடித்தார். அயர்லாந்து தரப்பில் மெக்கார்த்தி 4 விக்கெட்டுகளும், ஜார்ஜ் டாக்ரெல் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தி அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தனர். இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2-வது போட்டி இன்று நடைபெற உள்ளது.

# ஆர்.சி.பி. அணியில் டிம் சீபர்ட்

10 அணிகள் இடையிலான 18-வது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. குஜராத் டைட்டன்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, பஞ்சாப் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் ஆகிய அணிகள் பிளே ஆப் சுற்று வாய்ப்பை உறுதி செய்துவிட்டன. முன்னதாக நடப்பு ஐ.பி.எல். சீசன் இந்தியா - பாகிஸ்தான் சண்டை காரணமாக ஒரு வார காலம் நிறுத்தி வைக்கப்பட்டது.

தற்போது ஐ.பி.எல். போட்டி தொடங்கினாலும் முந்தைய போட்டி அட்டவணையுடன் ஒப்பிடும்போது 9 நாட்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனிடையே சர்வதேச போட்டிகளும் தொடங்க உள்ளதால் பல வெளிநாட்டு வீரர்கள் பிளே ஆப் சுற்றுகளை தவற விடுகின்றனர். அந்த வரிசையில் பெங்களூரு அணியில் இடம்பெற்றுள்ள இங்கிலாந்து வீரரான ஜேக்கப் பெத்தேல் கடைசி லீக் ஆட்டம் மற்றும் பிளே ஆப் சுற்றிலிருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக நியூசிலாந்து அதிரடி வீரரான டிம் சீபர்ட்டை மாற்று வீரராக பெங்களூரு ஒப்பந்தம் செய்துள்ளது.

# டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அசத்தல்

ஐரோப்பிய நாடுகளில் உள்ள முன்னணி கால்பந்து கிளப் அணிகளுக்கு இடையில் நடைபெறும் முதன்மையாக கால்பந்து தொடர் ஐரோப்பா கோப்பை சாம்பியன்ஸ் லீக். இதன் அரையிறுதி போட்டிகள் தற்போது நடைபெற்று வருகிறது. முதல் அரையிறுதியில் அத்லெடிக் கிளப் அணிக்கு எதிராக 7 கோல்கள் அடித்து மான்செஸ்டர் யுனைடட் அணி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. மற்றொரு அரையிறுதியில் போடோ/கிளிம்ட் அணிக்கு எதிராக 5 கோல்கள் அடித்து டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இறுதிப்போட்டியில் மான்செஸ்டர் யுனைடட் மற்றும் டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணிகள் மோதின. இப்போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் டோட்டன்ஹாம் வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றியது. ஆட்டத்தின் 42வது நிமிடத்தில் ஜான்சன் அடித்த கோல் டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தது இதன்மூலம் 17 ஆண்டுகளுக்குப் பிறகு ஐரோப்பா லீக் கோப்பையை டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர் கைப்பற்றி அசத்தியுள்ளது.

# 100 விக்கெட்டுகளை வீழ்த்திய குல்தீப்

ஐ.பி.எல். தொடரின் 63-வது லீக் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. இதில் மும்பை இந்தியன்ஸ், டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டாஸ் வென்ற டெல்லி கேப்பிட்டல்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட் செய்த மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 180 ரன்கள் குவித்தது.

இதையடுத்து, 181 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி அணி 18.2 ஓவரில் 121 ரன்கள் மட்டுமே எடுத்து ஆல் அவுட்டானது. இதன்மூலம் 59 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் வெற்றி பெற்றதுடன், பிளே ஆப் சுற்றுக்கும் முன்னேறியது. இப்போட்டியில் ரிக்கல்டன் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் ஐபிஎல் கிரிக்கெட்டில் 100 விக்கெட்டுகள் வீழ்த்தி குல்தீப் யாதவ் அசத்தியுள்ளார்.

## தலைநகர் டெல்லியில் புழுதிப்புயல்:
# சிறுமி உள்பட 3 பேர் பலி

**புதுடில்லி, மே 23-**

டில்லி யைத் தாக்கிய புழுதிப் புயல் மற்றும் கனமழை காரணமாக 9 வயது சிறுமி உள்பட மூவர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

டில்லியில் அதிகப்படியான வெய்யில் கொளுத்திவந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை திடீரென பெய்த மழையால் புழுதிப் புயல் ஏற்பட்டு, நகரம் முழுவதும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது. டில்லி-நொய்டா, காசியாபாத் மற்றும் குருகிராம் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. புழுதிப் புயலுக்கு 9 வயது சிறுமி உள்பட மூவர் பலியாகியுள்ளனர். மேலும் 11 பேர் காயமடைந்தனர்.

சஹானா என்கிற சாந்தினி ஒரு கட்டடத்தின் மூன்றாவது மாடியிலிருந்து இரும்பு ஜன்னல் பலகை விழுந்ததில் உயிரிழந்தார். அவர் உடனடியாக சிவில்லைன்ஸில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார் ஆனால் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதையடுத்து வீட்டின் உரிமையாளர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தென்கிழக்கு டில்லியின் நிஜாமுதீன் பகுதியில் லோதி சாலை மேம்பாலம் அருகே இடியுடன் கூடிய மழையின்போது மின்கம்பம் சரிந்து சாலையில் அந்த வழியாகச் சென்ற மாற்றுத்திறனாளி மீது விழுந்ததில், அவர் சஃப்தர்ஜங் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார், ஆனால் அவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மற்றொரு சம்பவத்தில், வடகிழக்கு டில்லியின் கோகுல்புரி பகுதியில் மரம் ஒன்று இருசக்கர வாகனத்தின் மீது விழுந்ததில் அசார்(22) என்பவர் இறந்தார்.

முகர்ஜி நகர் அருகே உள்ள ஒரு பழைய நடைபாதை மேம்பாலத்தின் கிரில்லின் ஒரு பகுதி இடிந்து விழுந்ததில் 6 பேர் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது. காஷ்மீர் கேட், மங்கோல்புரி பகுதியிலிருந்து மேலும் காயங்கள் பதிவாகியுள்ளன. புதன்கிழமை மாலை டில்லியில் ஏற்பட்ட கடுமையான வானிலை மாற்றத்தின் காரணமாக இந்த இறப்புகள், காயங்கள் ஏற்பட்டுள்ளன.

## தமிழகத்தில் அதிகரிக்கும் கொரோனா பாதிப்பு:
# பொது இடங்களில் மக்கள் மாஸ்க் அணிய சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

**சென்னை, மே 23-**

தமிழகத்தில் 66 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அடுத்து, பொது இடங்களில் மக்கள் மாஸ்க் அணிய வேண்டும் என்று பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

உலகம் முழுவதும் கடந்த 2019-ம் ஆண்டு முதல் கொரோனா வைரஸ் கோரத்தாண்டவம் ஆடியது. இந்த வைரஸ் பாதிப்பால் லட்சக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். 2022-ம் ஆண்டுவரை இதன் தாக்கம் அதிகமாக இருந்தது. அதன்பிறகு தான் உலகம் சகஜ நிலைக்கு திரும்பியது. பின்பு கொரோனா பாதிப்பு பெரிய அளவில் காணப்படவில்லை. அதேபோல் உயிரிழப்புகளும் இல்லாமல் இருந்தது.

இந்த நிலையில், கடந்த சில நாட்களாக இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் கொரோனா தொற்று அவ்வப்போது தலைகாட்டி வருகிறது. நாடு முழுவதும் 257 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இதில் அதிகபட்சமாக கேரளாவில் 95 பேர், தமிழ்நாட்டில் 66 பேர், மராட்டியத்தில் 56 பேர், கர்நாடகாவில் 13 பேர், புதுச்சேரியில் 10 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழகம் மட்டுமின்றி, அண்டை மாநிலமான கேரளா, கர்நாடகா, புதுச்சேரி மாநிலங்களிலும் கொரோனா தொற்று பரவி வருவதால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். இதுகுறித்து, தமிழக பொது சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது:- தமிழகத்தில் கொரோனா பாதிப்பு உள்ளது; ஆனால், தீவிர பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இல்லை. தற்போது, வீரியம் குறைந்த கொரோனா தொற்று பாதிப்பு தான் உள்ளது. பொது இடங்களில் முகக்கவசம் அணிதல், தொற்று தடுப்பு வழிமுறைகளை கடைப்பிடித்தல் அவசியம். காய்ச்சல், நுரையீரல் சார்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், அருகில் உள்ள டாக்டரை அணுகி, சிகிச்சை பெறுவது அவசியம் என்று கூறினர்.

பொது சுகாதார இயக்குநர் டாக்டர் டி.எஸ்.செல்வவிநாயகம் கூறும்போது, மக்கள் நெருக்கம் உள்ள பகுதிகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் பீதி அடையத் தேவையில்லை. கொரோனா தொற்று முற்றிலும் மறைந்துவிடவில்லை. பருவ காலங்களில் குறைந்த அளவில் பரவி வருகிறது என்றார்.

# நக்சல்களுக்கு எதிரான நடவடிக்கையில் பாதுகாப்புப்படை வீரர் உள்பட 2 பேர் பலி

**ராய்ப்பூர், மே 23-**

சத்தீஸ்கரின் பிஜப்பூர் மாவட்டத்தில் நக்சல்களுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையில் பாதுகாப்புப் படை வீரர் உள்பட 2 பேர் பலியாகியுள்ளனர்.

பிஜப்பூரின் தும்ரெல் பகுதியில் மத்திய ரிசர்வ் காவல் படையினரின் 210வது கோப்ரா படை, சத்தீஸ்கர் மாநில காவல் துறை மற்றும் சிறப்பு அதிரடி படையினர் ஆகியோர் நக்சல்களுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று (மே 22) அந்த நடவடிக்கையின்போது, கோப்ரா படையைச் சேர்ந்த வீரர் ஒருவர் பலியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மற்றொரு வீரர் படுகாயமடைந்துள்ளார். இதனைத் தொடர்ந்து, இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் மூலமாக, படுகாயமடைந்தவர் மீட்கப்பட்டுள்ளார். இத்துடன், பாதுகாப்புப் படையினரின் தாக்குதலில் அப்பகுதியிலுள்ள நக்சல் ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

முன்னதாக, வரும் 2026 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்துக்குள், இந்தியாவிலுள்ள நக்சல்கள் முற்றிலும் அழிக்கப்படுவார்கள் என மத்திய அரசு அறிவித்துள்ளது. இதையடுத்து, சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் பாதுகாப்புப் படையினர் நக்சல்களுக்கு எதிரான அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், சத்தீஸ்கரின் நாராயணப்பூர் - பிஜப்பூர் மாவட்ட எல்லையில், நேற்று முன்தினம் (மே 21) பாதுகாப்புப் படையினரால் நக்சல் படையின் முக்கிய தளபதி உள்பட 27 பேர் சுட்டுக்கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அமலாக்கத்துறை சோதனைக்கும் மத்திய அரசுக்கும் தொடர்பில்லை
## மத்திய அமைச்சர் எல்.முருகன் பேட்டி

**சென்னை, மே 23-**

டாஸ்மாக் அமலக்கத்துறை சோதனை விவகாரம் தொடர்பாக தமிழக அரசு மற்றும் டாஸ்மாக் நிர்வாகத்தின் மேல்முறையீட்டு மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டில் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் மற்றும் நீதிபதி அகஸ்டின் ஜார்ஜ் மாசிஹ் அடங்கிய அமர்வில் நேற்று காலை விசாரணைக்கு வந்தது.

இதில், டாஸ்மாக் முறைகேடு தொடர்பான விவகாரத்தில், அமலாக்கத்துறையினர் மேற்கொண்டு விசாரணை நடத்த தடை விதித்து ஆணையிட்டு, தமிழ்நாடு அரசு மற்றும் டாஸ்மாக் நிர்வாகத்தின் மேல்முறையீட்டு மனுவுக்கு பதிலளிக்க அமலக்கத்துறைக்கு நோட்டீஸ் பிறப்பித்தும் உத்தரவிட்டனர். இந்த நிலையில் , இது தொடர்பாக சென்னையில் செய்தியளர்களுக்கு பேட்டி அளித்த மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் கூறியதாவது:-

அமலாக்கத் துறையின் சோதனைக்கும், மத்திய அரசுக்கும் தொடர்பில்லை. எங்கு தவறு நடந்தாலும் சட்டத்திற்கு உட்பட்டு அமலாக்கத் துறை விசாரிக்கிறது. ஊழல் செய்தவர்கள் கண்டிப்பாக தண்டனைக்கு உள்ளாவார்கள். தவறு செய்தவர்கள் தண்டனை அனுபவித்தே ஆகவேண்டும். அமலாக்கத் துறை என்பது ஒரு சட்டப்படியான அமைப்பு. அமலாக்கத்துறை சட்டத்துக்கு உட்பட்டு வழக்கை எதிர்கொள்ளும். என தெரிவித்தார்.

# தி.மு.க. கூட்டணியில் இருந்து திருமாவளவன் வெளியேற வேண்டும்: நயினார் நாகேந்திரன்

**நெல்லை, மே 23-**

தி.மு.க. கூட்டணியில் இருந்து திருமாவளவன் வெளியேற வேண்டும் என்று நயினார் நாகேந்திரன் கூறியிருந்தார்.

நெல்லையில் பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

ராமதாஸ் - அன்புமணி ராமதாஸ் இடையே நடக்கும் பிரச்சினைக்கு பின்னால் பாஜக இல்லை. திமுகவை வீழ்த்துவதற்கு அனைத்து கட்சிகளும் ஒன்றிணை வேண்டும். பாஜக - அதிமுக கூட்டணி உடைந்து விடும் என்பது திருமாவளவனின் எண்ணம். திமுக கூட்டணியில் இருந்து திருமாவளவன் வெளியேற வேண்டும் என்பது எனது விருப்பம். 2026 சட்டமன்றத் தேர்தலில் கூட்டணியை நம்பி மட்டுமே முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் களத்தில் இருக்கிறார்.

தேர்தல் வாக்குறுதியில் அறிவித்த பெரும்பாலான திட்டங்களை முதல்-அமைச்சர் நிறைவேற்றவில்லை. சொத்து வரி உயர்வு மின் கட்டண உயர்வு போன்றவைகளால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள 10 மாத காலத்தில் மாதந்தோறும் மின் கட்டணம் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்றால் வரவிருக்கும் பாஜக ஆட்சியில் நிறைவேற்றப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# அடுத்த 10 நாட்களுக்கு 3 மாவட்டங்களில் கனமழை: வானிலை ஆய்வாளர் எச்சரிக்கை

**சென்னை, மே 23-**

அடுத்த 10 நாட்களுக்கு 3 மாவட்டங்களில் கனமழை கொட்டி தீர்க்கும் என வானிலை ஆய்வாளர் பிரதீப் ஜான் தெரிவித்துள்ளார்.

தனியார் வானிலை ஆய்வாளர் பிரதீப் ஜான் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், தென் மேற்கு பருவமழை தொடங்க உள்ளதால் மேற்கு கடற்கரை அல்லது தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மிக கனமழை முதல் அதிக மழை பெய்யும். அதன்படி, இன்று முதல் ஜூன் 3 வரை 10 நாட்களுக்கு கேரளா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு (கோயம்புத்தூர் - வால்பாறை, நீலகிரி - கூடலூர், கன்னியாகுமரி) பகுதிகளுக்கு மிக கனமழை எச்சரிக்கை. சில இடங்களில் 24 மணி நேரத்தில் சில தினங்களுக்கு 200 மிமீ (அதிக மழை) மழை பெய்யக்கூடும்.

பொதுவாக இந்த பருவ மழை அதிகரிப்பு ஜூன் மாதத்தில் ஏற்படும். ஆனால் அரபிக்கடல் மற்றும் வங்காள விரிகுடா பகுதிகளில் ஏற்பட்டுள்ள மழைக்கான அறிகுறிகள் இருப்பதால் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் அதிக மழை பெய்ய வாய்ப்பு இருக்கும். இது விடுமுறை காலம் என்பதால், குறிப்பாக அதிக மழை பெய்த பிறகு மேற்கு தொடர்ச்சி மலைகளில் உள்ள மலைகளுக்கு பயணிக்கும்போது சுற்றுலாப் பயணிகள் எச்சரிக்கையுடன் பயணிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இடுக்கி, குடகு, வயநாடு, நீலகிரியில் உள்ள கூடலூர் - அவலாஞ்சி பகுதி, வால்பாறை, சிக்மகளூர் மலைகள், கர்நாடக கடலோரப் பகுதிகள், உடுப்பி, ஷிமோகா மலைகள், உத்தர கன்னடம், வடக்கு கடற்கரை கேரளா போன்ற இடங்கள் அதிக ஆபத்தில் உள்ளன. கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, சிறுமலை, கொல்லி மலை, மேகமலை ஆகியவை பயணிக்க பாதுகாப்பானவை. மேற்கு கடற்கரை / மலைத்தொடர்களில் பருவ மழை ஆரம்பித்த உடன் சென்னையில் மழைக்கு வாய்ப்பு குறைய ஆரம்பித்து விடும். பெங்களூருவில் மேற்குப் பக்கத்திலிருந்து மேகங்களுடன் பருவமழை பெய்யும் என்று கூறியுள்ளார்.

**வாக்களிப்பது நமது கடமை**



திண்டுக்கல் மேற்கு மாவட்டம் அ.தி.மு.க. சட்டமன்ற தொகுதியில் திண்டுக்கல் தெற்கு பகுதி சார்பில் பூத் கமிட்டி அமைப்பது மற்றும் இளைஞர் இளம்பெண்கள் பாசறையில் உறுப்பினர்கள் சேர்ப்பது, இளம் தலைமுறை விளையாட்டு வீரர்களை உறுப்பினர்களாக சேர்ப்பது குறித்த ஆலோசனைக்கூட்டம் அ.தி.மு.க. பொருளாளரும், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. உடன் அமைப்பு செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான ஆசைமணி, அமைப்பு செயலாளர் வி.மருதராஜ், மாநகராட்சி எதிர்க்கட்சி தலைவர் சி.எஸ்.ராஜமோகன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் பாரதி முருகன், மாவட்ட இளைஞரணி செயலாளர் வி.டி.ராஜன், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணி, மோகன், சேசு, மாமன்ற உறுப்பினர் பாஸ்கரன், முன்னாள் ஆவின் சேர்மன் திவான்பாட்சா, கலைப்பிரிவு செயலாளர் ரவிக்குமார் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



மகாராஷ்டிரா கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணனை விருதுநகர் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது கலெக்டர் ஜெயசீலன் புத்தகம் வழங்கி வரவேற்றார்.

## உத்தங்குடியில் இன்று மதுரை வடக்கு - தெற்கு மாநகர் மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்

**திருமங்கலம், மே 23-**

மதுரை உத்தங்குடியில் ஜூன் 1 ம் தேதி நடைபெறவுள்ள தி.மு.க மாநில பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்க வருகை தரும் கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சி மிகு வரவேற்பு கொடுத்திடுவது தொடர்பாக உத்தங்குடி லக்கி பேலஸ் மண்டபத்தில் இன்று காலை மதுரை வடக்கு, தெற்கு, மாநகர் மாவட்ட திமுக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

இது தொடர்பாக மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி, சேடபட்டி மு.மணிமாறன், கோ.தளபதி எம்.எல்.ஏ ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மதுரை உத்தங்குடியில் வரும் ஜூன் 1ம் தேதி நடைபெறவுள்ள தி.மு.க மாநில பொதுக்குழு கூட்டத்தில் கழக தலைவர்,முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று சிறப்பிக்க வருகை தருகிறார். இதையடுத்து மதுரைக்கு வருகை தரும் முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு கொடுப்பது, விழாவை எழுச்சியுடன் சிறப்பாக நடத்துவது மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்த ஆலோசனை மேற்கொள்வதற்கு மதுரை வடக்கு, தெற்கு, மாநகர் மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் இன்று காலை உத்தங்குடியிலுள்ள லக்கி பேலஸ் திருமண மண்டபத்தில் சிறப்புடன் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில்மதுரை வடக்கு, தெற்கு, மாநகர் மாவட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் கலந்து கொள்ளுமாறு மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி,சேடபட்டி.மு.மணிமாறன், கோ.தளபதி எல்.எல்ஏ ஆகியோர் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர்.

## ஜமாபந்தி: பொது மக்களிடம் இருந்து மனுக்களை பெற்றார் கலெக்டர் ஜெயசீலன்



**விருதுநகர், மே 23-**

சிவகாசி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி இறுதி நாளான வருவாய்த் தீர்வாய அலுவலர் ஜெயசீலன், பொது மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்களை பெற்றுக் கொண்டார்.

விருதுநகர் மாவட்டத்தில் ஆண்டிற்கான ஜமாபந்தி 15.05.2025 முதல் 28.05.2025 வரை என 10 வட்டங்களில் நடைபெற்று வருகிறது. இதில் வருவாய் தீர்வாயத்தில் பொதுமக்களின் நியாயமான கோரிக்கை மனுக்கள் உடனடியாக வருவாய்த் தீர்வாய அலுவலரால் தணிக்கை செய்யப்பட்டது. பொதுமக்களிடமிருந்து நேரடியாக மனுக்கள் பெறப்பட்டு இறுதி நாளன்று பெறப்பட்ட மனுக்களுக்கு பதில் மற்றும் ஆணைகள் வழங்கப்படும். அதன்படி, சிவகாசி வட்டத்தில், 15.05.2025, 16.05.2025 20.05.2025, 21.05.2025 மற்றும் 22.05.2025 ஆகிய 5 தினங்கள் கலெக்டர் தலைமையில் நடைபெற்றது.

அதனடிப்படையில், பெறப்பட்ட மனுக்களை பரிசீலனை செய்து, வருவாய் தீர்வாயத்தின் முக்கிய நிகழ்வாக பொதுமக்களிடம் குறைகள் தீர்க்கும் பொருட்டு 392 மனுக்கள் பெறப்பட்டன. அவற்றில் 160 மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டு, 160 பயனாளிகளுக்கு உரிய உத்தரவுகள் வழங்கப்பட்டது. மீதமுள்ள மனுக்களை விரைந்து நிறைவு செய்ய கலெக்டர் ஜெயசீலன், அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, ஜமாபந்தியின் இறுதி நாளான நேற்று நத்தம் பட்டா மாறுதல் (முழுப்புலம்) 6 பயனாளிகளுக்கும், நத்தம் பட்டா மாறுதல் (உட்பிரிவு) 1 பயனாளிக்கும், பட்டா மாறுதல் (உட்பிரிவு) 4 பயனாளிகளுக்கும், இலவச வீட்டுமனைப்பட்டா 7 பயனாளிகளுக்கும், இ-பட்டா 3 பயனாளிகளுக்கும், முதியோர் உதவித்தொகை 38 பயனாளிகளுக்கும், விதவை உதவித்தொகை 46 பயனாளிகளுக்கும், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை 21 பயனாளிகளுக்கும், முதிர்கன்னி உதவித்தொகை 1 பயனாளிகளுக்கும், உழவர் பாதுகாப்புத் திட்டம் நிதி உதவி தொகை 7 பயனாளிகளுக்கும், புதிய குடும்ப அட்டை 26 பயனாளிகளுக்கும் என மொத்தம் 160 பயனாளிகளுக்கு ரூ.6,37,250- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சிவகாசி வட்டாட்சியர் லட்சம், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### வத்தலக்குண்டு கள்ளர் விடுதி அருகே

## சமுதாய கட்டிடம் கட்டக்கூடாது என வலியுறுத்தி நிலக்கோட்டை ஜமாபந்தியில் பொதுமக்கள் மனு



**வத்தலகுண்டு, மே 23-**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகாவில் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல் தலைமையில் ஜமாபந்தி நடைபெற்றது. நிலக்கோட்டை தாசில்தார் விஜயலட்சுமி முன்னிலை வைத்தார். ஜமாபந்தியில் நிலக்கோட்டை, நூத்துலாபுரம்,பச்ச மலையான்கோட்டை,கோட்டூர்,நரியூத்து, கோடாங்கிநாயக்கன் பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ளகிராமமக்களிடமிருந்து பட்டா மாறுதல்,வாரிசுச் சான்று, ரேஷன் கார்டு உள்ளிட்ட பல்வேறு வகையான மனுக்கள் பெறப்பட்டது.

இதில் வத்தலகுண்டு, உசிலம்பட்டி, நிலக்கோட்டை,மதுரை, தேனி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள உசிலம்பட்டி கள்ளர் கல்விக் கழக நிர்வாகிகள் மற்றும் வழக்கறிஞர்கள் சுமார் 50 பேர்கள் திரண்டு நிலக்கோட்டை தாலுகா அலுவலகம் ஜமாபந்தியில் ஒரு மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:-

நிலக்கோட்டை தாலுகா வத்தலகுண்டு பேரூராட்சிக்கு உட்பட்ட காமராஜர் நகரில் அமைந்துள்ள அரசு கள்ளர் மாணவர்கள் விடுதி உள்ளது.

இந்த விடுதிக்கு சொந்தமான இடத்தில் பேரூராட்சி நிர்வாகம் புதிய சமுதாயக் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து வருகிறது. இதற்காக கடந்த சில தினங்களுக்கு முன்பு அரசு கள்ளர் மாணவர்கள் விடுதி இடத்தை தாலுகா வருவாய் அதிகாரிகள் மற்றும் நில அளவையர்கள் சென்று அளந்து உள்ளதாகவும் அதற்கு எதிர்ப்பு அப்பகுதி பொதுமக்கள் மற்றும் உசிலம்பட்டி கள்ளர் கல்விக் கழக நிர்வாகிகளும் தடுத்து நிறுத்தியதாகவும் தொடர்ந்து இதுகுறித்து மேற் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்றும் தவறுதலாக அரசு புறம் போக்காக வைத்துள்ளதை உசிலம்பட்டி கள்ளர் கல்விக் கழகம் என்ற பெயரில் பட்டா வழங்க கோரியும் மனு கொடுத்தனர்.

இதனைப் பெற்றுக் கொண்ட திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல் உரிய முறையில் அளந்து பத்திரத்தில் என்ன அளவு இருக்கிறதோ அதுப்படி உங்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கூறியதால் அங்கிருந்த கள்ளர் கல்விக் கழகத்தினர் கலைந்து சென்றனர். கிராம நிர்வாக அலுவலர்கள் கணேசன் ராமமூர்த்தி தெய்வேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## நத்தம் அருகே முத்தாலம்மன் கோவில் திருவிழா கோலாகலம்

**நத்தம், மே 23-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே கோட்டையூர் கிராமம் நல்லூர்-குரும்பபட்டியில் மந்தை முத்தாலம்மன் கோவில் திருவிழா நடந்தது.இதில் நேற்று முன்தினம் இரவு முத்தாலம்மன் தீவட்டி பரிவாரங்கள், வானவேடிக்கைகளுடன் ஊர்வலமாக மேளதாளம் முழங்க கோவில் முன் உள்ள மந்தைக்கு சென்றது.பின்னர் கோவிலுக்குள் சென்ற அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடந்தது.தொடர்ந்து பக்தர்கள் பால்குடம் ,மாவிளக்கு, கிடாய்கள் வெட்டி தங்களது நேர்த்திக்கடன்களை செலுத்தினர்.



பின்னர் நேற்று மாலை வர்ணக் குடைகளுடன் பக்தர்கள் புடைசூழ அம்மன் பூஞ்சோலை சென்றது. விழாவில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். திருவிழாவிற்கான ஏற்பாடுகளை குரும்பபட்டி ஊர் கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

## நத்தத்தில் ஜமாபந்தி தொடக்கம்



**நத்தம், மே 23-**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகா அலுவலகத்தில் 3 நாட்கள் ஜமாபந்தி நடைபெறுகிறது .இதில் நேற்று முதல்நாள் ரெட்டியபட்டி வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட முளையூர்,புன்னப்பட்டி, செல்லப்பநாயக்கன் பட்டி, இடையபட்டி, சாத்தம்பாடி, லிங்கவாடி, புதூர்,ரெட்டியபட்டி கிராம பொதுமக்களுக்கு மனுக்கள் பெறும் முகாம் நடந்தது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி கலந்து கொண்டு பொதுமக்களிடையே கோரிக்கை மனுக்களை பெற்றார். தொடர்ந்து மனுக்களை பரிசீலத்து உடனடி தீர்வு காணுமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.இதில் தாசில்தார் ஆறுமுகம், மண்டல துணை தாசில்தார் சுந்தரபாண்டியன், வருவாய் ஆய்வாளர்கள் வெள்ளையம்மாள், தவமணி,துர்காதேவி, கிராம நிர்வாக அலுவலர்கள் சுரேந்திரன், முருகவேல், சரவணன் உள்ளிட்ட வருவாய்த்துறையினர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து இன்று செந்துறை வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட சிரங்காட்டுபட்டி, சேத்தூர், சிறுகுடி, கோட்டையூர், பிள்ளையார் நத்தம், குடகிப்பட்டி, செந்துறை உள்ளிட்ட கிராமங்களுக்கும், வருகிற 27-ந் தேதி செவ்வாய்க்கிழமையன்று நத்தம் வருவாய் கிராமத்திற்குட்பட்ட சமுத்திராபட்டி, ஊராளிபட்டி, பூதகுடி, பண்ணுவார்பட்டி, பாலப்பநாயக்கன்பட்டி,பாப்பாபட்டி, ஆவிச்சிபட்டி, பன்னியாமலை, நடுமண்டலம், வேலம்பட்டி, நத்தம் உட்பட்ட கிராமங்களுக்கும் ஜமாபந்தி நடைபெறுகிறது.

## ஏர்வாடி சந்தனக்கூடு திருவிழாவில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு



**ராமநாதபுரம், மே 23-**

ஏர்வாடி தர்ஹா 851-ம் ஆண்டு சந்தனக்கூடு திருவிழாவில் பல்வேறு மதங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை அருகே ஏர்வாடியில் புகழ்பெற்ற மகான் குத்பு சுல்தான் செய்யது இபுராகிம் ஷஹீது ஒலியுல்லாஹ் பாதுஷா நாயகம் 851-ம் ஆண்டு சந்தனக்கூடு சமூக நல்லிணக்க திருவிழா ஏப்.29-ல் புகழ்மாலை எனப்படும் மவ்லீது ஷரீப்புன் தொடங்கியது. அதனையடுத்து மே 9-ல் கொடியேற்றம் நடைபெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்வான சந்தனக்கூடு திருவிழா நேற்றுமுன்தினம் மாலை 4:30 மணிக்கு யானை, குதிரைகள் நடனமாட, தாரை தப்பட்டை ஒலிக்க, வான வேடிக்கையுடன் ஊர்வலமாக தர்காவில் இருந்து போர்வை எடுக்கும் நிகழ்வு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நேற்று அதிகாலை 3 மணிக்கு ஏர்வாடி முஜாவீர் நல்ல இபுராஹீம் தர்ஹாவில் இருந்து சந்தனக்கூடு எடுத்து, அலங்கார ரதத்துடன் ஊர்வலம் புறப்பட்டு, அதிகாலை 5.50 மணியளவில் தர்ஹா வந்தடைந்தது.

தர்ஹாவை மூன்று முறை சந்தனக்கூடு வலம் வந்த பின்பு சிறப்பு பிரார்த்தனைக்கு பின் மக்பராவில் பச்சை மற்றும் பல வண்ண போர்வைகளால் போற்றப்பட்டு மல்லிகை பூ சரங்களால் அலங்கரிக்கப்பட்டு சந்தனம் பூசப்பட்டது. திருவிழாவை காண ராமநாதபுரம் மாவட்டம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகள், கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டனர். கடந்த 3 தினங்களுக்கு முன்பு இரவு முதல் வண்ண மின் விளக்கு அலங்காரத்தில் தர்ஹா ஜொலித்தது. சமூக நல்லிணக்கத்துக்கு எடுத்துக் காட்டாக முஸ்லிம், இந்து, கிறிஸ்தவர் என பல்வேறு மதத்தினரும் இத்திருவிழாவில் பங்கேற்றனர்.

மதுரை, கோவை, திருச்சி, திண்டுக்கல், ராமநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் இருந்து அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் ஏர்வாடி தர்ஹாவுக்கு இயக்கப்பட்டன. தர்ஹா வளாகத்தில் சிறப்பு மருத்துவக்குழுவினர் முகாமிட்டு சிசிச்சை அளித்தனர். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ் தலைமையில் 500-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இத்திருவிழாவை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டத்துக்கு நேற்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டது. திருவிழாவிற்கான ஏற்பாடுகளை தர்ஹா ஹக்தார் சபை மற்றும் ஹக்தார்கள் செய்திருந்தனர். இதனையடுத்து மே 28-ம் தேதி மாலை 5.30 மணியளவில் கொடியிறக்கப்பட்டு, நெய் சோறு நேர்ச்சை வழங்கப்பட்டு விழா நிறைவு பெறும்.

## ஒட்டன்சத்திரத்தில் தனித்துணை ஆட்சியர் தலைமையில் ஜமாபந்தி



**ஒட்டன்சத்திரம். மே 23-**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி திண்டுக்கல் சமூக பாதுகாப்பு திட்டம் தனி துணை ஆட்சியர் கங்காதேவி தலைமையில் நடைபெற்றது. நேற்று நடைபெற்ற ஜமாபந்தியில் சின்னக்காம்பட்டி குறுவட்டத்தில் உள்ள கே.கீரனூர், சின்னக்காம்பட்டி, எல்லப்பட்டி, மார்க்கம்பட்டி, குத்திலுப்பை, ஓடைப்பட்டி, ஐ.வாடிப்பட்டி எம்.அத்தப்பம்பட்டி, நவக்கானி, மண்டவாடி, அம்பிளிக்கை, சிந்தலப்பட்டி, காப்பிளியப்பட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் அளித்த பட்டா மாறுதல், உட்பிரிவு ரேஷன் கார்டு திருத்தம் உதவித்தொகை உள்ளிட்ட மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. நிகழ்வில் வட்டாட்சியர் சஞ்சய்காந்தி, துணை வட்டாட்சியர் கனகராஜ், வருவாய் ஆய்வாளர் பாண்டித்துரை உள்ளிட்ட கிராம நிர்வாக அலுவலர்கள், கிராம உதவியாளர்கள், வருவாய்த் துறையினர் கலந்து கொண்டனர்.

## செந்துறை பகுதியில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க கோரிக்கை

**நத்தம், மே 23-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே உள்ளது செந்துறை ஊராட்சி .இங்கிருந்து துவரங்குறிச்சிக்கு செல்லும் சாலை, நல்லபிச்சன்பட்டிக்கு செல்லும் தார்சாலைகள் முற்றிலும் சேதமடைந்து குண்டும், குழியுமாகவும், ஆங்காங்கே பள்ளங்களாகவும் காட்சியளிக்கிறது. இதனால் இந்த வழியாக இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் செல்வோர் மிகவும் சிரமப்பட்டு செல்லும் நிலை ஏற்படுகிறது.

மேலும் இந்த சேதமடைந்த சாலைகளால் அவசர தேவைகளுக்கு கூட வாகனங்களில் வேகமாக செல்ல முடியாத சூழல் நிலவுகிறது.எனவே சம்பந்தபட்ட நிர்வாகம் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளின் நலன் கருதி சேதமடைந்த தார்சாலைகளை சீரமைக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கையும் எழுந்துள்ளது.

## கீழடி அறிக்கையை திருப்பியனுப்பிய மத்திய அரசுக்கு சு.வெங்கடேசன் எம்.பி. கண்டனம்

**சென்னை, மே 23-**

கீழடி அறிக்கையை திருப்பியனுப்பிய மத்திய அரசுக்கு சு.வெங்கடேசன் எம்.பி. கண்டனம் தெரிவித்தார்.

கீழடி அறிக்கையில் திருத்தம் தேவை என ஒன்றிய தொல்லியல் துறை அமர்நாத் இராமகிருஷ்ணனின் அறிக்கையை திருப்பி அனுப்பியுள்ளது. தமிழ்நாட்டின் தொன்மைக்கும், கீழடியின் உண்மைக்கும் என்றென்றும் எதிரி பாஜக என மதுரை எம்.பி சு.வெங்கடேசன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ' கீழடி எனும் வரலாற்றுத் தொல் நகரம் கண்டறிய நடத்தப்பட்ட ஆய்வின் அறிக்கையை அமர்நாத் இராமகிருஷ்ணன் 2023 ஜனவரி மாதம் ஒன்றிய தொல்லியல் துறைக்கு சமர்பித்தார்.

ஆனால் ஒன்றிய தொல்லியல் துறை அந்த ஆய்வறிக்கையை வெளியிடவில்லை. இது குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பபட்ட போது "விரைவில் வெளியிடப்படும்" என்று தொல்லியல் துறையால் உறுதிமொழி அளிக்கப்பட்டது.

ஆனாலும் இப்பொழுது வரை அறிக்கை வெளியிடப்படவில்லை. இந்நிலையில் வரும் 27 ஆம் தேதி நாடாளுமன்ற உறுதிமொழிக் குழு கூட்டம் நடைபெற உள்ள நிலையில், கீழடி அறிக்கையில் திருத்தம் தேவை என ஒன்றிய தொல்லியல் துறை அமர்நாத் இராமகிருஷ்ணனின் அறிக்கையை திருப்பி அனுப்பியுள்ளது.

கீழடியின் உண்மைகளை அதிகார பூர்வமாக அறிவிக்க ஒன்றிய தொல்லியல் துறை எளிதில் முன்வராது. தமிழ்நாட்டின் தொன்மைக்கும், கீழடியின் உண்மைக்கும்" என்றென்றும் எதிரிகள் யார் என்பதை ஒன்றிய தொல்லியல் துறையின் ஒவ்வொரு செயலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. புராணங்களை வரலாறாக மாற்ற நாள்தோறும் பணியாற்றி வரும் பாஜக அரசு அதே வேகத்தோடு நமது வரலாற்றை மறைக்கவும் பணியாற்றி வருகிறது. தமிழர்களின் வரலாற்றுத் தொன்மை என்பது பாஜக அரசின் அரசாணையோடு சம்பந்தபட்டதல்ல..

நிரூபிக்கப்பட்ட அறிவியலோடு சம்பந்தபட்டது. அதனை மறைக்க அவர்களால் ஒரு போதும் முடியாது. கீழடி தமிழர்களின் தாய்மடி என்ற உண்மையை உரக்கச்சொல்வோம் எனத் தெரிவித்துள்ளார்.



● துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், தங்களின் இடைக்கால பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக சந்தித்த 2013-ம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த இந்திய வெளியுறவுப் பணி அலுவலர்கள், வெளிநாட்டு முதலீடுகளை கவர்ந்து இழுக்கும் இடமாக தமிழ்நாடு திகழ்வதற்காக, தமிழ்நாடு முதல்வர் தலைமையிலான அரசிற்கு தங்களது பாராட்டுகளைத் தெரிவித்தனர். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ஜூன் 1-ம் தேதி மதுரையில் நடைபெறும்

# தி.மு.க. பொதுக்குழு ஏற்பாடுகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை

**சென்னை, மே 23-**

ஜூன் 1-ம் தேதி மதுரையில் நடைபெறவுள்ள தி.மு.க. பொதுக்குழு ஏற்பாடுகள் தொடர்பாக தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் சென்னை அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர்களுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

மதுரையில் ஜூன் 1-ம் தேதி நடைபெற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்துக்காக மதுரை உத்தங்குடியில் பிரம்மாண்ட அரங்குகள் அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. மதுரையில் ஜூன் 1-ல் நடக்கவுள்ள தி.மு.க. பொதுக்கூட்டத்தில் தமிழகம் முழுவதுமிருந்து 7 ஆயிரம் பொதுக்குழு உறுப்பினர்கள் பங்கேற்கின்றனர். இதற்காக மதுரை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையிலுள்ள உத்தங்குடி அருகே பிரதான சாலையை ஒட்டியுள்ள 20 ஏக்கர் நிலத்தில் பொதுக்குழுக் கூட்ட அரங்குகள் அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. ஒரே அரங்கில் 7 ஆயிரம் பொதுக்குழு உறுப்பினர்கள் அமரும் வகையில் பிரம்மாண்ட அரங்கும். உணவருந்த தனியாக ஒரு அரங்கமும் அமைக்கப்படுகின்றன. இவை முழுவதும் குளிர்சாதன வசதி செய்யப்பட உள்ளது. மழை, காற்று, வெயிலால் எந்த பாதிப்பும் இல்லாத வகையிலும், நட்சத்திர விடுதியைப்போன்று உள்ளரங்க அலங்காரம் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழகம் முழுவதும் உள்ள தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியச் செயலாளர்கள் உட்பட 7 ஆயிரம் பேர் இக்கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர். இவர்களது வாகனங்கள் பார்க்கிங் செய்வதற்கும் இடவசதி தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் நிகழ்ச்சி நடைபெறும் இடத்திலிருந்து வெளியே செல்லும் கார்கள் பாண்டி கோயில் சுற்றுச்சாலையில் நேரடியாக இணையும் வகையில் புதிதாக தனிப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

காலை 9.30 மணிக்கு பொதுக்குழுக் கூட்டம் தொடங்கும். பகல் 12.30 மணியளவில் கூட்டம் முடிவடையும். தேர்தல் பணிகளை தீவிரமாக துவங்குவதற்கு அச்சாரமாக முதல்வர் ஸ்டாலின் பேச்சு மிக முக்கியமானதாக இருக்கும். கூட்டம் முடிவடைந்த பின்பு பொதுக்குழு உறுப்பினர்களுக்கு தடபுடலான சைவ, அசைவ விருந்து நடைபெறும். இதற்காக தமிழகத்தின் சிறந்த சமையல் கலைஞர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். தமிழக முதல்வர், அமைச்சர்கள், விஐபிக்கள், பொதுக்குழு உறுப்பினர்களுக்கு தனித்தனி நுழைவு வாயில்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது. வாகன பார்க்கிங் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே தி.மு.க. பொதுக்குழு ஏற்பாடுகள் தொடர்பாக தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையில் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

# புதிய நகைக் கடன் விதிமுறைகளை ஆர்.பி.ஐ. திரும்பப்பெற வேண்டும்

### அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்

**சென்னை, மே 23-**

"நகைக் கடனுக்கான புதிய விதிமுறைகளை ரிசர்வ் வங்கி உடனே திரும்பப் பெற வேண்டும்." என தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தியுள்ளார்.

வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் தங்க நகைக்கடன் வழங்குவது தொடர்பாக 9 புதிய வரைவு விதிமுறைகளை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது. இதற்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.



இந்நிலையில், இது தொடர்பாக தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "தங்க நகை அடமானம் வைப்பதில் பல புதிய விதிமுறைகளைக் கொண்டு வந்து சாமானியர்களின் தலையில் இடியை இறக்கி இருக்கிறது ரிசர்வ் வங்கி. ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களே பெரும்பாலும் தங்களது அவசர தேவைகளுக்கு தங்க நகைக் கடன் போன்றவற்றைச் சார்ந்திருக்கும் சூழலில் அதன் மீது மத்திய ரிசர்வ் வங்கி விதித்திருக்கும் புதிய விதிமுறைகள் சாமானிய மக்களை பாதிக்கும் செயலாக அமைந்துள்ளது.

அவசரம் என்று வரும் மக்களை அத்தியாவசியமற்ற விவரங்களையும், ஆதாரங்களையும் கேட்டு அலைக்கழிக்கும் இந்த புதிய நடைமுறையை மத்திய ரிசர்வ் வங்கி உடனடியாக கைவிட வேண்டும் என வலியுறுத்துகின்றேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.



● காஞ்சிபுரம் மாவட்டம், கோவூர் குளத்தை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.4.98 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிக்கான பூமி பூஜையை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் துறைசாரந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கனிமொழி தலைமையிலான எம்.பி.க்கள் ரஷ்யா பயணம்



**புதுடெல்லி, மே 23-**

கனிமொழி எம்.பி. தலைமையிலான குழு ரஷ்யாவுக்கு புறப்பட்டனர்.

பாகிஸ்தானில் இந்திய ராணுவம் மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் தாக்குதல் தொடர்பாக வெளிநாடுகளுக்கு விவரிக்கும் வகையில், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்லும் குழுவின் தலைவராக தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதியை மத்திய அரசு அறிவித்திருந்தது.

இந்த நிலையில், கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான குழு நேற்று ரஷ்யாவுக்கு புறப்பட்டனர். அந்நாட்டு வெளியுறவுத் துறை மந்திரி மற்றும் அதிகாரிகளுடன் நாளை ஆலோசனை நடத்தவுள்ளனர். தொடர்ந்து, லாத்வியா, சிலோவேனியா, கிரீஸ், ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளுக்கும் கனிமொழி கருணாநிதி தலைமையிலான குழு பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்த குழுவில், சமாஜ்வாதி கட்சியை சார்ந்த எம்.பி. ராஜீவ் ராய், பா.ஜ.க. கட்சியை சார்ந்த எம்.பி. கேப்டன் பிரஜேஷ் சௌட்டா, ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியை சார்ந்த எம்.பி. பிரேம் சந்த் குப்தா, ஆம் ஆத்மி கட்சியை சார்ந்த அசோக் குமார் மித்தல், தூதர் மஞ்சீவ் சிங் பூரி ஆகியோர் உடன் சென்றுள்ளனர்.

### தமிழ்நாட்டில் மேம்படுத்தப்பட்ட

# 9 அம்ரித் பாரத் ரயில் நிலையங்கள்: பிரதமர் மோடி திறந்து வைத்தார்

**புதுடெல்லி, மே 23-**

தமிழ்நாட்டில் மேம்படுத்தப்பட்ட 9 அம்ரித் பாரத் ரயில் நிலையங்களை பிரதமர் மோடி நேற்று திறந்து வைத்தார்.

'அம்ரித் பாரத்' திட்டத்தின் கீழ், 508 ரயில் நிலையங்களை, 24,470 கோடி ரூபாயில் மேம்படுத்தும் பணிகள் ஓராண்டாக நடந்து வருகின்றன. தெற்கு ரயில்வேயில், 40க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படுகின்றன. இந்த நிலையில், நாடு முழுதும் பணிகள் நிறைவடைந்த 103 ரயில் நிலையங்களை, பிரதமர் மோடி டெல்லியில் இருந்து, காணொலி காட்சி வாயிலாக, நேற்று திறந்து வைத்தார். தமிழகத்தில் சென்னை பரங்கிமலை, சாமல்பட்டி, சிதம்பரம், திருவண்ணாமலை, மன்னார்குடி, ஸ்ரீரங்கம், விருத்தாசலம், போளூர், குழித்துறை ஆகிய 9 அம்ரித் பாரத் ரயில் நிலையங்கள் திறக்கப்பட்டன.

இந்நிலையங்கள் சிட்டி சென்ட்டர் போன்று ரூப் பிளாஸா, புட் கோர்ட், சிறுவர் விளையாட்டுப் பகுதி போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. ரயில் நிலையங்களில் தனித்தனி உள்நுழையும் மற்றும் வெளியேறும் வாசல்கள், பன்னடுக்கு வாகன நிறுத்தப்பகுதி, மின்தூக்கி, மின்னுயர்த்தி, எக்சிகியூட்டிவ் லான்ஜ், காத்திருப்புப் பகுதி, டிராவலேட்டர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்குத் தோழமையான வசதிகள்.

இந்நிலையங்கள் ஒருங்கிணைந்த மல்ட்டி மாடல் இணைப்புகளுடன் அந்தந்தப் பகுதிகளுக்கு பொருளாதார மேம்பாட்டு மையங்களாகத் திகழும். சுற்றுச்சூழல் அழகை தக்கவைக்க மின் சிக்கனம் மற்றும் பசுமைப் பாதுகாப்புத் திட்டங்களுடன் கட்டப்பட்டுள்ளது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மாஹே அம்ரித் பாரத் ரயில் நிலையமும் திறக்கப்பட்டது.

### காஷ்மீரில் பயங்கரவாதிகள் தாக்குதல்:

# ராணுவ வீரர் வீரமரணம்

**ஸ்ரீநகர், மே 23-**

ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் மற்றும் பயங்கரவாதிகள் இடையே துப்பாக்கிச்சண்டை நடைபெற்றது. இதில், 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த மோதலில், ராணுவ வீரர் ஒருவர் வீரமரணம் அடைந்தார்.

ஏப்.,22ம் தேதி நடந்த பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து, ஜம்மு காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த வாரம் உளவுத்துறை கொடுத்த ரகசிய தகவலின் பேரில், பாதுகாப்பு படையினரின் கூட்டு நடவடிக்கையால், கேலர் மற்றும் நடர் பகுதியில் 6 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில், கிஷ்த்வார் மாவட்டத்தில் உள்ள சிங்போரா பகுதியில் பாதுகாப்பு படையினருக்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. 'ஆபரேஷன் த்ராஷி' என்ற பெயரில் படைகள் குவிக்கப்பட்டு, பயங்கரவாதிகளை சுட்டுக் கொல்லும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. 3 அல்லது 4 பயங்கரவாதிகளை சுற்றி வளைத்து பாதுகாப்பு படையினர் தாக்குதல் நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது. தொடர்ந்து துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இந்நிலையில், பயங்கரவாதிகளுக்கு எதிரான மோதலில், ராணுவ வீரர் ஒருவர் வீரமரணம் அடைந்தார்.

# அரபிக்கடலில் உருவானது காற்றழுத்த தாழ்வு பகுதி

### இந்திய வானிலை மையம் தகவல்

**புதுடில்லி, மே 23-**

"கிழக்கு மத்திய அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது" என இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்திய வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை: கிழக்கு மத்திய அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. அடுத்த 36 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு பகுதி தாழ்வு மண்டலமாக வலுப்பெறும். அடுத்த ஓரிரு நாட்களில் தென்மேற்கு பருவ மழை கேரளாவில் தொடங்க வாய்ப்பு உள்ளது. வடக்கு கர்நாடகா, கோவா கடலோர பகுதியில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகி உள்ளது. தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதியில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அமலாக்கத்துறை விசாரணைக்கு.... (1-ம் பக்க தொடர்ச்சி)

முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது.

**44 வழக்கு பதிவு...**

அப்போது தமிழக அரசு மற்றும் டாஸ்மாக் நிறுவனத்துக்காக ஆஜரான மூத்த வழக்கறிஞர்களான கபில் சிபல் மற்றும் முகுல் ரோத்தஹி ஆகியோர், கடந்த 2017-ம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு, டாஸ்மாக்கை நிர்வகித்து வருகிறது, தனி நபர்கள் பணம் பெற்றது தொடர்பாக 44 வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகிறது, ஆனால் அமலாக்கத்துறை தற்போது தான் வழக்கில் வந்துள்ளனர். ஒரு அலுவலகத்தில் அத்துமீறி அதன் செயல்பாட்டை முடக்கும் விதமாக கணினி, பென் டிரைவ் உள்ளிட்ட அனைத்தையும் அமலாக்கத்துறையினர் முடக்கினர். அதேபோல டாஸ்மாக் நிர்வாக அனைத்து ஊழியர்களின் தொலைபேசிகள் ஒட்டுகேட்கப்பட்டு வருகின்றன. தனிநபர் பிரைவசியை மீறும் வகையில் ஒட்டுகேட்பு நடத்தி வருகின்றனர். இது தனிநபரின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே இது தொடர்பாகவும் சுப்ரீம் கோர்ட் விசாரிக்க வேண்டும்.

**அத்துமீறலில்...**

அதேவேளையில், தனிப்பட்ட நபர்கள் செய்த குற்றத்திற்காக அவர்கள் மீது தமிழக அரசே நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் அமலாக்கத்துறை டாஸ்மார் அலுவலகத்திற்கு வந்து இதுபோன்று நடந்துள்ளனர். இது எந்த வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடியது. அமலாக்கத்துறையினர் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவித்தனர்.

**சுப்ரீம் கோர்ட் கேள்வி....**

அந்த வாதத்தை கேட்ட நீதிபதிகள்., தனி நபர்கள் செய்த விதி மீறலுக்காக ஒட்டுமொத்தமாக ஒரு நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுப்பதா ? என கேள்வி எழுப்பி அமலாக்கத்துறை வரம்பு மீறி நடக்கிறது என கண்டனம் தெரிவித்தனர். மேலும், முறைகேடு நடந்தது என்றால் சம்பந்தப்பட்ட தனிநபர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தலாம். ஆனால் ஒட்டுமொத்த அரசு நிறுவனத்தையும் எப்படி நீங்கள் விசாரிக்க முயற்சிப்பீர்கள்? என வினவியதோடு அமலாக்கத்துறை அனைத்து விதிகளையும் மீறுகிறது, வரம்பு மீறி அமலாக்கத்துறை செயல்படுகிறது என மீண்டும் கண்டனத்தை பதிவு செய்தனர்.

**விசாரணைக்கு தடை....**

மேலும், அமலாக்கத்துறையானது அனைத்து எல்லையையும் தாண்டி செயல்பட்டு கூட்டாட்சி அமைப்பை சிதைத்துள்ளது என கூறியதோடு, டாஸ்மாக் முறைகேடு தொடர்பான விவகாரத்தில், அமலாக்கத்துறையினர் மேற்கொண்டு விசாரணை நடத்த தடை விதித்து ஆணையிட்டு, தமிழ்நாடு அரசு மற்றும் டாஸ்மாக் நிர்வாகத்தின் மேல்முறையீட்டு மனுவுக்கு பதிலளிக்க அமலாக்கத்துறைக்கு நோட்டீஸ் பிறப்பித்தும் உத்தரவிட்டனர். இதனையடுத்து இந்த வழக்கு மீதான அடுத்த விசாரணையை சுப்ரீம் கோர்ட்டின் கோடைகால விடுமுறைக்கு பின்னர் ஒத்திவைத்தனர்.